

# தரம் 4

# தாய் மொழி
# தமிழ்
# செயல் நூல்



2002 முதல் அமுல்படுத்தப்படும்
தேசிய கல்வி நிறுவன பாடவிதானத்தைத் தழுவியது




ஆக்கம்
பேராசிரியர் பொன். சக்திவேல்

விலை 90/-

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX, P.O. BOX NO: 162,

# முகவுரை

தமிழ்மொழி அடிப்படை மொழித்திறனை செயற்பாடுகள் ஊடாக வளர்த்துச் செல்லக் கூடிய முறையில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனப் பாடப்பரப்பு பிரிக்கப்பட்டுள்ளது. செயற்பாடுகள் மூலம் மாணவரின் மொழிவிருத்தித் திறன் வளர்ச்சியடையக் கூடிய முறையில் செயற்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன. பாடசாலைச் சூழல், பிரதேசம், வளம் என்பவற்றிற்கிணங்க பொருத்தமானதாக இப்பாடத்திட்டம் உள்ளது.

மாணவர்களின் தொடர்பாடல் திறன், கிரகிக்கும் ஆற்றல், அறிவு வளர்ச்சி, மனப்பாங்கு விருத்தி, திருத்தமான மொழிபிரயோகம், சிந்தனை விருத்தி, சமூகத்திறன் விருத்தி, கலாசாரப் பண்பாட்டு விருத்தி, கற்றலுக்கான கற்றல் எனும் குறிக்கோள்களை நிறைவு செய்யக் கூடிய முறையில் விடயங்கள் நான்கு பரப்புகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றை நாம் முறையே கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என வகுத்து செயல் நூலை உருவாக்கி உள்ளோம்.

தரம் 4 மாணவர்களிடம் சொற்களஞ்சிய விருத்தி, மொழி வளம், திருத்த மொழிப்பிரயோகம் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன. இதே ரீதியில் மாணவர்களின் வாசிப்பு, பேச்சு, கேட்டல், எழுத்து என்பன விருத்தி அடையக்கூடிய முறையில் 2002 ஆண்டு முதல் அமுலாக்கப்படும் புதிய பாடத்திட்டத்திற்கு அனுசரணையாக – செயல் முறை நூலாக இதனை வகுத்துள்ளோம். இந்நூலை மாணவர்களும் ஆசிரியர்களும் பாவிப்பதன் மூலம் சிறந்த பலாபலன்களை அடைய முடியும்.

நன்றி

பேராசிரியர். பொன். சக்திவேல்

# தாய்மொழி - தமிழ் - நான்காந் தரம்
# பாடத்திட்டம்

## 1.0 செவிமடுத்தல்

**1.1 கிரகித்தலுக்கும், துலங்குதலுக்கும் செவிமடுத்தல்**

* உரையாடல்கள், அறிவுறுத்தல்கள், அறிவித்தல்கள், பல்வகைப் பேச்சுகள், நிகழ்வுகள் பற்றிய வர்ணனைகள், கதைகள், பாடல்கள் போன்ற மொழி வடிவங்கள்.

* பாடநூல் / துணைநூல்களில் வாசிக்கப்படும் விடயக் கூறுகள் ~ சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள், சிறுபந்திகள்.

கருத்து வெளிப்பாட்டிற்காகக் குறித்துப் பயன்படுத்தப்படும் சொற்கள் ஆகையால், ஏனென்றால், எனவே ........ போன்றவை.

**1.2 இரசித்தலுக்காகச் செவிமடுத்தல்.**

* பாடல்கள், அபிநயப்பாடல்கள், தாளலயப் பாடல்கள், கதைகள், வர்ணனைகள், நாட்டியப் பாடல்கள், நாடகங்கள்

**1.3 கற்றலுக்காகச் செவிமடுத்தல்.**

* மாகாணம், நாடு பற்றிய முக்கிய தகவல்கள்

* நிகழ்ச்சிகள், நிகழ்வுகள் தொடர்பான வர்ணனைகள்

* பல்வேறு மொழிவடிவங்கள் வாயிலான தகவல்கள், எண்ணக்கருக்கள்

**பண்புடன் செவிமடுத்தல்.**

* பணிவுடன் செவிமடுத்தல் (பெரியோர் ~ மூத்தோர்)

* உணர்வு பூர்வமாகச் செவிமடுத்தல் (நண்பர் / உறவினர் முன்)

* அமைதியாகச் செவிமடுத்தல் (சபையில்)

* கருத்தூன்றிச் செவிமடுத்தல் (கற்றல் சந்தர்ப்பங்களில்)

**1.4 சிந்தித்தலுக்காகச் செவிமடுத்தல்.**

* புதிர்கள், விடுகதைகள், விடுவித்தல்

* வினாக்களுக்கு விடை கூறுதல்.

* கதைகள், பாடல்கள், கூற்றுக்கள், வர்ணனைகள்

* செவிமடுத்து அனுமானித்தல், தொடர்பு காணல்.

## 2.0 பேசுதல்

**2.1 விருப்புடன் இயல்பாகப் பேசுதல்.**

* நட்புறவுடனான உரையாடல்கள்.

* அபிநயத்துடன் கதைகள் கூறுதல்.

* விடுகதைகள், புதிர்கள் முன்வைத்தல்.

* பாடுதல், பாலதுதல்.

* நடித்து / பாவனை செய்து பேசுதல்.

**2.2 தெளிவாக உச்சரித்துப் பேசுதல் / பாடுதல்**
* மெய்பாடுகளுடன் பேசுதல், கதைகூறுதல்
* தாளலயத்துடன் பாடுதல், ஆடிப் பாடுதல்.
* கருத்தொன்றை அழுத்திப் பேசுதல்
* ஒலிவேறுபாடுகளை அனுசரித்துப் பேசுதல்
* பல்வேறு தேவைகளுக்கான அறிவித்தல், அறிவுறுத்தல் கூறுதல்.

**2.3 தொடர்பாடலுக்காகப் பேசுதல்.**
* தமது தேவைகள், உணர்வுகள், கருத்துகள் என்பவற்றை வெளிப்படுத்திப்பேசுதல்.
* தகவல்கள் வழங்குதல், பெறுதல், பரிமாறுதல்
* அனுபவங்களை ஒழுங்குமுறையில் கூறுதல்.
* புதிய அனுபவங்கள், தகவல்கள் பெறுவதற்காக ஆராய்வுடன் பேசுதல் (வினாக்கள் கேட்டல்)

## 3.0 வாசித்தல்

**3.1 பொறிமுறைகளை அனுசரித்து வாசித்தல்.**
* தெளிவான உச்சரிப்பு, விளக்கம், குறியீடுகள், ஒலிபேதங்கள் உயிர்க்குறிகள் என்பவற்றை அனுசரித்து வாசித்தல்.
* மெய்பாடுகளுடன் வாசித்தல்.

**3.2 கிரகித்தலுக்காக வாசித்தல்.**
* உரத்து வாசித்தல் (அறிவித்தல், அறிவுறுத்தல், துண்டுப்பிரசுரங்கள்)
* மௌனமாக வாசித்தல் (பல்வேறு மொழி வடிவங்கள்) துலங்குவதற்கான அறிவுறுத்தல்கள்.
* வாசிக்கும் தகவல்களை விமர்சித்துக் கிரகித்தல்.

**3.3 சொற்களஞ்சிய விருத்திக்காக வாசித்தல்.**
* பரிச்சயமான சொற்கள், அறிமுகமான சொற்கள், புதிய சொற்களை அவதானித்து வாசித்தல்.
* ஏனைய பாடங்கள் மூலம் சொற்களஞ்சிய வளம் பெறுதல்.
* சொற்களின் சரியான பிரயோகத்தை அறிதலுக்காக வாசித்தல்.

**3.4 இரசித்தலுக்காக வாசித்தல்.**
* பல்வகைப் பாடல்கள், கவிதைகள். செய்யுள்கள்
* கதைகள், நாடகங்கள் போன்ற உரைநடை ஆக்கங்கள்
* சித்திரக்கதைகள், கேலிச்சித்திரங்கள், விகடத் துணுக்குகள் போன்றவை.

**3.5 கற்றலுக்காக வாசித்தல்.**
* பாடநூல்கள், துணைநூல்கள்
* பொது அறிவு விருத்திக்கான பல்வகை நூல்கள்
* தகவல் பெறுவதற்காகத் தெரிவு செய்து வாசித்தல்

**3.6 வாசித்தலுக்காக வாசித்தல்.**
* பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற பிரசுரங்கள்

* கதைகள், உரையாடல்கள், நாடகங்கள்.
* துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள், சுவரொட்டிகள்
* பாடல்கள், கவிதைகள் (புதுக்கவிதைகள்)

## 4.0 எழுதுதல்

### 4.1 எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுதல்

* தமிழ் எழுத்துக்களின் அமைப்பு, அளவு, திசைமுகம் என்பவற்றை அனுசரித்து எழுதுதல்.
* ஏற்ற இடைவெளி விட்டு எழுதுதல்
  (எழுத்து, சொல், வாக்கியம் பந்தி)
* உயிர்க்குறிகளை முறைப்படி அமைத்து எழுதுதல்.
* நிறுத்தற் குறியீடுகளை அனுசரித்து எழுதுதல்.
* சொற்களை அசை பிரித்து எழுதுதல் (வேண்டியவிடத்து)

### 4.2 நாளாந்த தேவைகளுக்காக எழுதுதல்

* சொந்த விபரங்களைத் திருத்தமாக எழுதுதல்
  (பெயர், விலாசம்)
* தனிப்பட்ட தேவைகளுக்காக எழுதுதல்.
  (கடிதம், கால அட்டவணை, குறிப்புகள்)
* படிவங்கள் நிரப்புதல்
  (போட்டி விண்ணப்பம், தந்திப்படிவம் போன்றவை)
* நினைவுபடுத்தல், கற்றலுக்கான குறிப்புகள்
* அறிவித்தல், அறிவுறுத்தல்கள் கூற்று வாக்கியங்கள்

### 4.3 ஆக்கபூர்வமாக எழுதுதல்

* படங்கள் பார்த்து, விவரணம், கதைகள் எழுதுதல்.
* கற்பனை செய்து கதைகள் எழுதுதல்
* மொழிவிருத்திக்கான பல்வகைப் பயிற்சிகளைப் பூர்த்தி செய்து எழுதுதல்
  (விடைகள் எழுதுதல், நிரப்பி எழுதுதல், ஒழுங்குபடுத்தி எழுதுதல் போன்றவை)
* சொற்சக்கரம், சொல்வட்டம், சொல் படிகள் ஆக்குதல்.
* ஒரு பொருள் பற்றி வாக்கியங்கள் எழுதுதல்.
* சுவர்ப்பத்திரிகை எழுதுதல்.

### 4.4 எழுத்து மொழிப் பிரயோகத்தை அனுசரித்து எழுதுதல்.

* வாக்கிய அமைவை அனுசரித்து வாககியங்களை எழுதுதல்.
* திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றை அனுசரித்து வாக்கியங்களை எழுதுதல்.
* ஒலி வேறுபாடுகளை அனுசரித்துச் சொற்கள், வாக்கியங்களை எழுதுதல்.
* எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ; ஆண்பால் பெண்பால் ; ஒருமை, பன்மை ; ஒத்தகருத்து சொற்கள் ; பெயர்ச் சொற்கள், வினைச்சொற்கள் ஆகியவற்றை இனங் கண்டு எழுதுதல்.

# 1.0 செவிமடுத்தல்

## 1.1 கிரகித்தலுக்கும் துலங்குதலுக்கும் செவிமடுத்தல் குறிக்கோள்

### 1.1.1 சமூகமான உரையாடலுக்காக செவிமடுத்தல்.

பல்வேறு வகையான மொழிவடிவங்களைச் செவிமடுத்து கிரகிக்கும் திறனை வளர்ப்பதற்கு மாணவர்கள் தாம் கேட்ட. வாசித்த, பார்த்த நிகழ்ச்சிகளில் ஒன்றை வகுப்பறையில் கூற மற்றவர்கள் அதனைக் கேட்டு அதனால் ஏற்படும் அனுபவத்தைப் பெற வழிகாட்ட வேண்டும்.

திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, புதினப் பத்திரிகை, சிறுவர் கதை நூல்கள், நாடகங்கள், சமயப் பண்பாட்டு நிகழ்ச்சிகள் போன்றவற்றில் எல்லா மாணவர்களும் தமக்கேற்பட்ட அனுபவத்தை கூற ஏனையோர் செவிமடுத்துக் கிரகித்தல் வேண்டும்.

பிள்ளைகளே, விளையாட்டு முறையில் கேட்டலைச் சுவையான நிகழ்ச்சியாக மாற்றலாம். இதற்கு ஆசிரியரின் ஒத்துழைப்பு அவசியம்.

ஆசிரியர் ஆண்டு 4ல் படிக்கும் மாணவரை வட்டமாக இருத்தி தான் நடுவில் நின்று கொண்டு குறிப்பிட்ட மாணவன் ஒருவனை அழைத்து ஒரு செய்தியை இரகசியமாக அவன் காதில் கூறி அதனை பக்கத்திலுள்ள மாணவனுக்கு சொல்லச் சொன்னார். இவ்வாறு அச்செய்தி வகுப்பிலுள்ள மாணவர்கள் ஒவ்வொருவர் காதிலும் இரகசியமாகக் கூறப்பட்டு பரப்பட்டது, இறுதியாக செய்தியைக் கேட்ட மாணவன் அச்செய்தியை ஆசிரியரிடம் கூறினான். ஆனால் அச்செய்தி திரிபடைந்திருந்தது. காரணம் ஒவ்வொருவரும் தங்களுக்கேற்ற முறையில் அச்செய்தியை கூறியதே ஆகும். செய்தி திரிபடையாதிருப்பதற்காக செய்திகளை அவதானித்துக் கேட்க வேண்டுமென ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாணவர்களாகிய நாம் நாளாந்தம் பல வகையான செய்திகள், கட்டுரைகள், கடிதங்கள், வானொலி நிகழ்ச்சிகள் ஆகியவற்றை செவிமடுக்கின்றோம். இச்செய்திகளை கிரகித்து மற்றொருவருக்கு கூறுகிறோம். சில விளம்பரங்களை தொடர்ந்து வானொலி, தொலைக்காட்சி என்பவற்றின் மூலம் கேட்பதனால் அவை எமக்கு மனப்பாடமாகி கிரகிக்க இலகுவாக இருக்கும்.

இந்த வகையில் கோபால் பல்பொடி, சிக்னல், அங்கர் பால்மா, சுவர்ணமஹால், பனடோல், அஸ்ரா மாஜரின் போன்ற பல பொருட்களின் விளம்பரங்கள் எமக்கு மனப்பாடமாக உள்ளன. இதற்கு காரணம் எமது கிரகிப்புத் தன்மையே.

### 1.1.2 அறிவுறுத்தல்கள், அறிவித்தல்கள் என்பவற்றை செவிமடுத்துக கிரத்து துலங்குதல்

பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் காலைக் கூட்டத்தில் உரையாற்றுவதை அவதானத்தோடும். பணிவுடனும் செவிமடுத்தல் வேண்டும் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். பிள்ளைகளே! பாடசாலையில் பரிசளிப்பு விழாக்கள். விளையாட்டு

போட்டிகள் என்பவற்றின் போது ஆற்றப்படும் உரைகளையும், கோவில்களில் சமயத் தலைவர்கள், சான்றோர்கள் ஆகியோர் பேசுவதையும் பண்புடனும், பணிவுடனும் செவிமடுத்து திறனை வளர்த்துக கொள்ள வேண்டும்.

மாணவர் மன்ற நிகழ்ச்சிகளில் தலைவர் உரை, கூட்ட அறிக்கை, சொற்பொழிவுகள், உரையாடல்கள், கதை, நாடகம், விவாதங்கள், பரிசளிப்பு விழாக்களில் அதிபரின் உரை, பிரதம விருந்தினரின் சிறப்புரை, கலை நிகழ்ச்சிகள், தேசிய கீதம், பாடசாலைக் கீதம், விளையாட்டுக்கள் பற்றிய அறிவிப்புக்கள் என்பனவற்றை அவதானித்து செவிமடுத்து பின் வகுப்பறையில் அவை பற்றி கலந்துரையாடல் வேண்டும். இவை யாவற்றையும் வகுப்பறையில் மீட்டல் செய்வதற்கு ஆசிரியர் உதவ வேண்டும்.

## பயிற்சி

1. முதல் நாள் மாலை 6.30 மணிக்கு ரூபவாஹினியில் வாசிக்கப்பட்ட செய்தி அறிக்கையை எழுதுமாறு உங்கள் ஆசிரியர் உங்களைக் கேட்டுள்ளார். உங்களை ஒரு செய்தி வாசிப்பாளராக கருதிக் கொண்டு அதனை எழுதுக.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

2. வானொலி அல்லது தொலைக்காட்சியில் கேட்ட, உங்களுக்கு விருப்பமான விளம்பரம் ஒன்றை எழுதுக?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

3. நீர் பார்த்து பரவசம் அடைந்த கிரிக்கட் போட்டியின் முக்கிய காட்சியை விபரிக்க.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

4. அதிகாலையில் வானொலிச் செய்தியை நீங்கள் செவிமடுத்துக் கொண்டு இருந்தபோது ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களின் பரீட்சை முடிவுகள் வெளிவந்து விட்டதாகவும்.

**எழுதுங்கள்**

அகர முதல எழுத்தெல்லாம்

அநேக மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் எனவும் அறிந்து கொண்டீர்கள். இச் செய்தியை செவிமடுத்த நீங்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தாருங்கள்.

1. இச்செய்தி மாணவராகிய உங்களை மிகவும் ஊன்றிக் கவனிக்க செய்தது எது அதற்கான காரணம் யாது?

....................................................................................................

2. இச்செய்தி உங்களுக்கு மிகவும் துணிச்சலை தந்துள்ளது. இதற்கான காரணம் யாது?

....................................................................................................

3. நீங்கள் எந்த வருடத்தில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளீர்கள்?

....................................................................................................

4. இச்செய்தி ஒலிபரப்பபட்ட நேரம் யாது?

....................................................................................................


5. இச்செய்தியை மிகவும் உன்னிப்பாக அவதானித்த நீங்கள் இதைப் பற்றி பாடசாலையில் ஆசிரியருக்கு எவ்வாறு கூறுவீர்கள்?

....................................................................................................

## 1.1.3 பல்வகைப் பேச்சுகள், நிகழ்வுகள்பற்றிய வர்ணனைகள் செவிமடுத்தல்

பின்வருவனவற்றை மௌனமாக வாசித்து அவற்றின் சாரம்சத்தை சொந்த நடையில் எழுதுக.

அம்மா நான் விளையாடப்போறேன் – கையில்
அன்புடன் பட்சணம் தந்தனுப்பென்னை
சும்மா நான் உட்காரமாட்டேன் – நல்ல
தோழர் அழைக்கின்றார் நாழிகையாச்சு – அம்மா



பூப்பறித்தாடுவோம் கொஞ்சம் – சுவாமி
பூசை செய்தாடுவோம் பூரதங்கட்டி
வேப்ப மரத்தடி மண்ணில் – சிறு
வீடுகள் கட்டி விருந்துகள் செய்வோம்

வட்டக் குளத்திற்குச் செல்வோம் – களி
மண்ணையுருட்டித் திரட்டி வருவோம்
சட்டிகள் பொம்மைகள் செய்வோம் – பின்பு
சாதஞ் சமைத்தொன்றாய் சாப்பிடலாம் – அம்மா

பாட்டுக் கச்சேரிகள் செய்வோம் – நான்
பாடுவேன் மத்தளம் போடுவான் கிட்டு
கேட்டுச் சபாஸ் எனச் சொல்வார் – நல்ல
கிண்கிணி கட்டி நடனங்கள் செய்வோம்

வேட்டிகளால் திரை கட்டி – பல
வேடங்கள் போட்டொரு நாடகமாடி
காட்டுவோம் பாரதக் காட்சி – நான்
கண்ணனின் சொற்படி காண்டீபனாவேன்.


.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................


## 1.1.4 கதைகள், பாடல்கள் என்பவற்றை செவிமடுத்து இரசித்தல்



எள்ளெடுத்தது வெள்ளெலி
கொள்ளெடுத்தது முள்ளெலி
நெல்லெடுத்தது சுள்ளெலி
நெற்றெடுத்தது புற்றெலி

எள்ளைக் கொடுத்தது வெள்ளெலி
கொள்ளைக் கொடுத்தது முள்ளெலி
நெல்லைக் கொடுத்தது கள்ளெலி
நெற்றைக் கொடுத்தது புற்றெலி

கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று
காவல் புரிகின்ற சேவகா ! – நின்று
காவல் புரிகின்ற சேவகா !
மெத்தக் கவனமாக கூலியும் வாங்காமல்
வேலை புரிபவன் வேறுயார் ! உன்னைப்போல்
வேலை புரிபவன் வேறுயார் !




கண்ணும் இமையாமல் நித்திரை கொள்ளாமல்
காவல் புரிகின்ற சேவகா! – என்றும்
காவல் புரிகின்ற சேவகா!
எண்ணில் உன்னைப்போல் இரவுபகலாம்
ஏவல் புரிபவன் வேறு யார்? – என்றும்
ஏவல் புரிபவன் வேறு யார்?

**எழுதுங்கள்**

ஆதிபகவன் முதற்றே உலகு

வட்டமான பெரும்பூசினிக் காய்போல
மஞ்சள் நிற உறு மாலைப்பார்! – தலையில்
மஞ்சள் நிற உறு மாலைப்பார்!
கட்டி இறுக்கிய சட்டையைப் பாரங்கே
கைகளில் அம்பொடு வில்லைப்பார்! இரு
கைகளில் அம்பொடு வில்லைப்பார்!

## விளையாட்டுப் பாடல்கள், குழுப்பாடல்கள்





சிங்கத்தின் வீட்டிற் கொண்டாட்டம்
சிறுத்தைகள் எல்லாம் பெருங்கூட்டம்

சிலந்தி கட்டும் வெள்ளை
குரங்கு கட்டும் மாலை




ஒட்டகம் கொட்டகை ஆக்கும்
சிவிங்கி சரங்கள் தூக்கும்



கரடி கொட்டும் மேளம்
குதிரை தட்டும் தாளம்




பாட்டுப் பாடும் குயில்கள்
நாட்டியம் ஆடும் மயில்கள்



பன்னீர் தெளிக்கும் யானை
சந்தனம் கொடுக்கும் பூனை



மான்கள் பாயை விரிக்கும்
முயல்கள் அழைத்துச் சிரிக்கும்.

## கதைகள், கட்டுரைகள், உரைநடைப் பகுதிகள்

மாணவர்களே! கீழ்க்காணும் கதையை வாசித்து பூர்த்தி ஆக்குங்கள்

### பொன் முட்டையிடும் வாத்து

ஒரு ஊரிலே ஒரு முட்டை வியாபாரி இருந்தான். அவன் வாத்து முட்டைகளையும். கோழி முட்டைகளையும் சந்தையில் விற்று வந்தான். அவனிடம் பொன்முட்டையிடும் வாத்து ஒன்று இருந்தது. அது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொன்முட்டை இட்டது. வியாபாரி பணக்காரன் ஆனான். அவனுக்கு விரைவில் பெரும் தனவந்தன் ஆகும் எண்ணம் வந்தது. ..........................................................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

### 1.1.5 சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் முதலியவற்றை செவிமடுத்தல்.

**சில புதிய சொற்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்துங்கள்.**


| | | | |
|---|---|---|---|
| மன்னிப்பு | பாசறை | போர்த்துக்கீசர் | தாவரவியற்பூங்கா |
| நன்கொடை | அறிவாளி | பொதுச்சொத்து | அருங்காட்சியகம் |
| வரவேற்பு | ஓடியற்சூழ் | தொண்டு | உயிர்ச்சத்து |
| விருந்துபசாரம் | அமைச்சர் | தொழிற்சாலை | சரணாலயம் |
| தலைவாசல் | கானகம் | பொல்லாங்கு | ஏற்றுமதி |
| நஷ்டஈடு | சேய்மை | தானதருமம் | |
| காப்புறுதி | மரப்பொந்து | மூத்துநீர் | |
| காற்றோட்டம் | ஐரோப்பா | கைவிசேடம் | |
| கொழுகொம்பு | ஓவியம் | ஈரலிப்பு | |

## 1.2 இரசித்தலுக்காகச் செவிமடுத்தல்

### 1.2.1 பாடல்களை செவிமடுத்து இரசித்து பாடுதல்

**சின்னச் சின்னச் கோபுரம்**

சின்னச் சின்னச் கோபுரம்
சிற்பி செய்யாக் கோபுரம்
என்னைப் போல மூன்றடி
இருக்கும் அந்தக் கோபுரம்



சின்னஞ் சிறிய கோபுரம்
செங்கல் நிறத்துக் கோபுரம்
மண்ணால் ஆன கோபுரம்
மனிதர் நுழையாக் கோபுரம்
அருமையான கோபுரம்
யார் அமைத்த கோபுரம்?
கறையான் ஒன்று கூடியே
கட்டி வைத்த கோபுரம்.

– குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

## 1.2.2 கதைகளைச் செவிமடுத்து இரசித்தல்

**பின்வரும் கதையைப் படித்து கிரகித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு நாள் ஒரு பூனை எலியைப் பிடித்தது. அந்த எலியை உடனே தின்னாமல் அதனுடன் சிறிது விளையாட விரும்பி எலியை முன்னங்காலால் பிடித்துக் கொண்டு சீறியது. விளையாட்டாகக் கடித்தது. எலி அஞ்சி நடுங்கியது. 'கீச், கீச்' எனக் கத்தியது. அது பூனையைப் பார்த்து பூனையாரே, நீங்கள் பெரியவர், நான் சிறியவன் தயவு செய்து என்னை விட்டு விடுங்கள் என்று கெஞ்சியது.

எலி பயந்து நடுங்குவதைப் பார்த்து பூனை சிரித்தது. "எலிப்பிள்ளையே, அஞ்சாதே" என்று சொல்லி எலியை விடுவித்து "நீ போகலாம்". என்று கூறியது. எலி தப்பித்தேன் பிழைத்தேன் என ஓடியது. சிறிது தூரம் ஓடிய எலியை மறுபடியும் பூனை பிடித்துக்கொண்டது. இவ்வாறு விடுவதும் பிடிப்பதுமாய் எலியோடு விளையாடியது. எலி வேதனையால் துடிதுடித்தது.

அப்போது ஒரு நாய் வந்தது. நாயைக் கண்ட பூனை எலியை விட்டுவிட்டு ஓடப்பார்த்தது. நாய் பூனையைப் பிடித்துக்கொண்டது. எலி ஓடி ஒளித்தது. நாய் பூனையைக் கடித்தது. அதனை உதறி எறிந்தது. பூனை தன்னை விட்டு விடுமாறு நாயிடம் கெஞ்சியது. நாய் பூனையை விட்டு விட்டுப் பிடித்துப் பிடித்து காலால் மிதித்தது. பூனை துடிதுடித்தது.

ஒளித்திருந்து இதனைப் பார்த்த எலி, "பூனையாருக்கு நான் பட்ட துன்பம் இப்போதாவது தெரிந்திருக்கும்" என்று சொல்லி அப்பால் சென்றது.

1. எலி ஏன் வேதனைப்பட்டது?

   ................................................................................

2. எலி தப்புவதற்காக பூனைக்கு என்ன சொன்னது?

   ................................................................................

3. பூனை எலியை எவ்வாறு வேதனைப்படுத்தியது?

   ................................................................................

4. நாயைக் கண்ட பூனை என்ன செய்தது?

   ................................................................................

5. எலி முடிவில் என்ன சொல்லி அப்பால் சென்றது?

   ................................................................................

**பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே – உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்

**எழுதுங்கள்**

அவசரக் காரனுக்கு புத்திமட்டு

ஓடி வருகையிலே – கண்ணம்மா
உள்ளங் குளிருதடி
ஆடித் திரிதல் கண்டால் – உன்னைப்போய்
ஆவி தழுவுதடி

1. இப்பாடல் யாருக்காகப் பாடப்படுகிறது?
......................................................................................................

2. கிளி எனக் கூறப்படுவது யார்?
......................................................................................................

3. ஆவி என்ற சொல்லிற்கு ஒத்த சொல் யாது?
......................................................................................................

4. குழந்தைக்கு எப்பெயர் சூட்டப்பட்டுள்ளது?
......................................................................................................

5. ஏற்றம் என்ற சொல்லின் எதிர்க்கருத்து யாது?
......................................................................................................

## 1.2.3 வர்ணனைகளைச் செவிமடுத்து நயத்தல்

கடற்கரையில் சிறுவர்கள் தம்மை மறந்து விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள்.. பெற்றோர்கள் சிறுவர்கள். விளையாடும் காட்சியை ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். சூரியன் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்கின்றது. பறவைகள் கூட்டம் கூட்டமாக தமது இருப்பிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. கடல் அமைதியாகக் காட்சி தருகிறது. இன்று அலைகள் பொங்கி எழவில்லை. கடல் அலைகள் ஏன் இன்று பொங்கியெழவில்லை. காரணம் எனக்குப் புரியவில்லை.................

**பாத்திரமேற்று, நாடகங்களில் நடனம் ஆகியவற்றை இரசித்தல்**

பரதன், குகன், நளன், சீதை, தமயந்தி, திரௌபதி முதலிய கதாபாத்திரங்களை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

குகன் : **"என் பெயர் குகன்"**

"நான் தோணியோட்டுபவன். நேற்று இந்தக் கங்கைக் கரைக்குத் தசரதனால் காட்டுக்குத் துரத்தப்பட்ட ஸ்ரீ இராமபெருமான் அவர்கள் வந்தார்கள். அவர்களைத் தோணியேற்றி கங்கைக்கரைக்கு அப்பால் கொண்டு சென்று விட்டேன். மனம் நெகிழ்ந்த ஸ்ரீ ராமபிரான்" குகா, நீயும் என் சகோதரன். நாங்கள் நால்வர், உன்னோடு இன்று ஐவரானோம்" என்று இழிந்தவனாயிருந்த என்னையும் தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டார்கள். அதை என்னால் மறக்க முடியுமா? அதோ! பரதன் ஸ்ரீ ராமபிரானைக் கொல்லப் படை கொண்டு வருகிறான். என் உயிர் உள்ளவரை அவன் இக்கங்கைக் கரையைக் கடந்து போக முடியுமா, என்பதைப் பார்க்கிறேன்!

'குகன்' கூறியது போல மாணவர்கள் பேசி நடித்துக் காட்ட வேண்டும். இதேபோல் ஏனைய பல கதாபாத்திரங்களைப் போலவும் நடித்துக் காட்ட வேண்டும்.

## 1.3 கற்றலுக்காகச் செவிமடுத்தல், பண்புடன் செவிமடுதல்

### 1.3.1 பல்வேறு தகவல்களையும், அறிவியல் சார்ந்த செய்திகளையும் செவிமடுத்தல்.

**பிள்ளைகளே, உங்கள் வகுப்புத் தமிழ்ப் பாடத்தில் வரும் சிறு உரையாடலின் ஒரு பகுதியைப் பாருங்கள்**

அப்பா – "என்ன பாலா, வரம்பிலே சறுக்கி விழுந்து விட்டாயா?"

பாலா – "ஆம் அப்பா"

அப்பா – "இவை உயரமான வரம்புகள், கவனமாக நடந்து வா"

பாலா – "ஏன் அப்பா, இப்படி உயரமாக வரம்புகளைக் கட்டியிருக்கிறார்கள்? உயரம் இல்லாமல் அகலமாகக் கட்டினால் என்ன? அகலமாகக் கட்டினால், கண்ணை மூடிக்கொண்டு ஓடிப் போகலாமே!"

அப்பா – "வயல் வரம்புகளை அகலமாகக் கட்டுவதில்லை. இப்படி உயரமாகத்தான் கட்ட வேண்டும்.
அப்பொழுதுதான் வயலில் தண்ணீர் நிறைந்து நின்று நெல் செழித்து வளரும்."

பாலா – "அப்படியா அப்பா?"

அப்பா – "ஆம் பாலா ஔவைப் பாட்டியும் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்."

பாலா – "ஔவைப் பாட்டியா? அப்பா அவர் என்ன சொல்லியிருக்கிறார்?"

அப்பா – ஔவைப்பாட்டி ஒரு சிறந்த புலவர் அவர்தான் வரம்பை உயரமாகக் கட்டச் சொல்லி இருக்கிறார்.

<u>**பாட்டுக்கொரு புலவன்**</u>

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா – அவன்
பாட்டை பண்ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா அவன்
கிறுக்கில் ஊறும் மொழி பொறுப்பாயடா.



தேனும் தினையும் பாலில் உண்ணலாமடா
தித்திக்கும் மாங்கனியும் உண்ணலாமடா
கானக் குழலிசையும் கேட்கலாமடா
உந்தன் கவி பாடுவதையும் கேட்கலாமடா

உள்ளம் தெளியும் ஒரு பாட்டிலேயடா
மிக ஊக்கம் பிறக்கும் ஒரு பாட்டிலேயடா
கள்வெறி கொள்ளுமோர் பாட்டிலேயடா
மிக்க கண்ணீர் தந்திடுமோர் பாட்டிலேயடா



ஆண் – வெங்காயக் கூடு தூக்கி வீதிவழி போற பெண்ணே சிங்கார நடை நடந்து சிரித்துக் கொண்டு போவதென்ன?

பெண் – சங்கத்திலே நான் குடுத்து சல்லிக்காசு சம்பாதித்தேன் தங்கத்திலே வளையல் வாங்கி என் கரத்தில் நான் அணிவேன்.

ஆண் – நைலோனும் வாங்கித் தாறன் நைலேசும் வாங்கித் தாறேன். கைலேஞ்சி வாங்கித் தாறேன் கால்சிலிப்பர் வாங்கித்தாறேன்.

பெண் – அப்பன் அறிந்தால் உன்னை அடித்து நொருக்கிடுவான். முப்பத்திரண்டு பல்லை முழுசாகக் கட்ட வைப்பான்.

ஆண் – ஆச்சியின்ரை அண்ணையெல்லோ ஆசையான உன்ரை தேப்பன் நாச்சியார் உன்ரை ஆச்சி நல்ல மாமி எனக்குமல்லோ?

பெண் – உண்ணாணப் போகாதே உன்ரை ஆச்சியறிய கண்ணானை எனக்குமல்லோ கலியாணம் பேசுகினம் கண்ணானை எனக்குமல்லோ கலியாணம் பேசுகினம்.

ஆண் – எங்கையடி பேசுகினம், எவனையடி பேசுகினம், மங்களமாய் தாலிகட்ட மாப்பிள்ளை நானிருக்க.

பெண் – அப்பன் ஏசினாலென்ன ஆச்சி ஏசினாலென்ன? துப்பல் வரும் நேரத்துக்கே தூக்கிக்கொண்டு போயிடுவான்.

ஆண் – வெங்காயக் கூடு விற்க சங்கத்துக்குப் போகவேணும் அங்கை பார் ஆச்சி வாறா இஞ்சாலை நாகும் போறன்.

**குப்பத்துப் பெண்**

ஓ............. ஓ...........
கூடை மேலே கூடை வைச்சு
குப்பத்துக்குப் போற பெண்ணே
குப்பத்திலே பெஞ்ச மழை
யென் கண்ணே ரத்தினமே

சூடை நனையல்லேயென்
கண்ணே ரத்தினமே.

மத்தங்காப் பீல்லு வெட்டி
மலையோரம் போற பெண்ணே
மலை மேலே பெஞ்ச மழை என்
கண்ணே ரத்தினமே உன்
மேனி நனையலேயே என்
கண்ணே ரத்தினமே

கோடரிக் கொண்டை போட்டு
கோயிலுக்குப் போற பெண்ணே
கோயிலிலே பெஞ்ச மழை என்
கண்ணே ரத்தினமே – உண்
கொண்டை நனையலேயே என்
கண்ணே ரத்தினமே.

## 1.3.2 விருப்புடன் பல்வேறு தகவல்களை செவிமடுத்தல்

**ஒரே பாடசாலையில் கன்னனும், மதனும் படிக்கிறார்கள். அவர்கள் இருவரும் சந்திக்கிறார்கள்.**

| | | |
|---|---|---|
| கன்னன் | – | ஹலோ மதன் இன்று பாடசாலைக்குச் சென்றாயா? |
| மதன் | – | ஆம், நீர் ஏன் பாடசாலைக்கு வரவில்லை? |
| கன்னன் | – | எனக்கு கொஞ்சம் வயிற்றுளைவு,அதனால்தான் வரவில்லை. |
| மதன் | – | அப்படியா? இப்போது சுகமா? |
| கன்னன் | – | ஆம். வைத்தியரிடம் மருந்து எடுத்தேன். இப்போது சுகம். |

**பொது நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதன் மூலம் தகவல் திரட்டுதல்.**

மாணவர்களே, உங்களது பாடசாலையில் நடந்த விழாக்கள், கூட்டங்கள் ஆகியவற்றில் நடந்தேறிய விடயங்களை முறைப்படி அறிக்கைகளாக தயாரித்து பழகுங்கள். அவ்வாறே உங்கள் ஊரிலுள்ள மன்றங்களிலும் உங்களது பங்களிப்பைச் செலுத்துங்கள். அந்த நிகழ்ச்சிகளின் தகவல்களை மற்றையோருக்கும் எடுத்துக் கூறுங்கள்.

**மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம் தகவல்களைத் திரட்டுதல்.**

தொடர்பு சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஆகியன வழங்கும் சமய நற்சிந்தனைகள், விழாக்கள் சம்பந்தமான நேர்முக வர்ணனைகள், சிறுவர்களுக்கான ஒலி – ஒளிபரப்புக்கள், கல்விச் சேவை ஒலி – ஒளிபரப்புக்கள், அறிவியல் தொடர்பான ஒலி – ஒளிபரப்புக்களை அவதானியுங்கள். அவற்றை மீண்டும் மீண்டும் நினைவு படுத்தி மற்றவர்களுக்குக் கூறுங்கள். இதன் மூலமும் கிரகித்தலை விருத்தி செய்யலாம்.

**எழுதுங்கள்**

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

நீங்கள் தொலைக்காட்சியில் சுதந்திர தின நிகழ்ச்சிகள், கார்ட்டூன் படங்கள், சிறுவன் நாடகங்கள் போன்றவற்றைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா? இவை பற்றி ஏனையோருக்கும் விபரித்துக் கூறுங்கள். நீங்கள் கூறுபவற்றை அவற்றின் கருத்தும், உணர்வும் நன்கு தெளிவாகும் வகையில் தேவையான இடங்களில் சொற்களுக்கு அழுத்தம் கொடுத்தும், தரித்து நின்றும், தொனியை ஏற்றி இறக்கியும், முகபாவம், அபிநயம் என்பன காட்டியும், இசையுடன் பாடியும் செவிமடுத்தலை சுவை மிக்கதாக்குங்கள்.

மாணவர்கள் கேட்ட, பார்த்த, படித்த விடயங்களிலிருந்து தகவல்களைத் திரட்டுமாறு ஆசிரியர் அவர்களுக்குக் கூறினார். மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் எதுகை, மோனையும், ஓசை நயமும் பொருந்திய பாடல்களை பாடிக் காட்டி அவற்றை திருப்பி ஒப்புவிக்குமாறு கூறினார்.



## 1.3.3 பணிவுடன் அமைதியாகவும், கருத்தூன்றி செவிமடுத்தல்

மாணவர்களாகிய எமது வீட்டிலும், பாடசாலையிலும் பாதையிலும் பலருடன் பேசிப் பழகுகிறோம். பேசும்போது அன்பாக பேசுதல் வேண்டும். நாம் முதியவர்களுடன் பேசும் போது அவர்களுக்கு வணக்கம் கூறி பேசத் தொடங்குதல் வேண்டும். முதியவர்களுடன் அவர்களுக்கு ஏற்ற முறையில் பேசிப் பழகுதல் வேண்டும்.

**நண்பர்கள், சகபாடிகளுடன் பேசும்போது.**

நண்பர்களுடன் நட்பு முறையில் அன்னியோன்யமாக பேசலாம். நண்பர்களுடன் பேசும் போது நட்பின் இயல்புகள் நமக்குத் தெரியவரும். நண்பர்கள் தமக்குள் பலதரப்பட்ட விடயங்களையும் பேசுவார்கள்.

**இளையோருடன் பேசும் போது**

எமக்கு இளையவர்களான தம்பி, தங்கைகளுடனும், எமது அயலவருடனும் அன்பாகவும் இனிமையாகவும் பேசி அவர்களின் அன்பைப் பெறலாம்.

சிறுவராகிய நாம் எல்லோருடனும் ஒற்றுமையுடனும் அன்பாகவும் பழகுதல் வேண்டும். நாம் நட்புக் கொள்ளும் நண்பர்களும் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இஃது பற்றி ஔவையார் மூதுரையில்.


நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

எனப் பாடியுள்ளார். ஆகவே நாமும் நல்லவருடன் பேசிப் பழகுவது சிறப்பானதாகும்.

நாம் நம்மிலும் சிறியவர்களுடன் அன்பாகவும் பாசமாகவும் பழுகுதல் வேண்டும். சிறுவர்களை அவர்களின் பெயரைக் கூறாது தம்பி. தங்கையென அழைக்க வேண்டும். அவர்களுக்கு அறிவூட்டக்கூடிய புத்திமதிகள் வழங்க வேண்டும்.

**எழுதுங்கள்**

அன்புதான் இவ்வுலகத்தின் கடவுள்



கீழே காணும் கொன்றை வேந்தன் முதுமொழியை சொல்லிக் கொடுப்பது நல்லது இதனை ஔவையார் பாடியுள்ளார்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினும் செய்வன செய்
ஒருவரைப்பற்றி ஓரகத்திரு
ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு

**வலது குறைந்தோர் / நோயாளருடன் பேசும்போது**

வலது குறைந்தோருடன் பேசும் போது அன்பாக அவர்களின் குறைபாட்டை சுட்டிக்காட்டாது பேசுதல் வேண்டும். அதேபோல் நோயாளருடன் பேசும் போதும் அவர்களின் நோய் விரைவாக குணமாகும் எனும் துணிவை வழங்கக்கூடிய முறையில் பேச வேண்டும். நோயாளிக்கு நாம் பேசும் ஒவ்வொரு பேச்சும் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

**பயிற்சி**

1) **கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக**

1. பேசத் தொடங்கும் போது என்ன கூறவேண்டும்?
.....................................................................................................
2. எம்முடன் வசிப்பவர்கள் யார்?
.....................................................................................................

**எழுதுங்கள்**

அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்

3. நல்லாரைக் காண்பது எப்படியானது?

..................................................................................................................

4. நோயாளருடன் எவ்வாறு பேச வேண்டும்?

..................................................................................................................

5. குறைபாடு உள்ளவர்களுடன் எவ்வாறு பழக வேண்டும்?

..................................................................................................................

**2) இடைவெளிகளில் ஏற்ற சொல்லை எழுதவும்**

1. ........................................ இணங்கி இருப்பதும் நன்றே.
2. உண்டி ........................................ பெண்டிர்க்கு அழகு.
3. ஏவாமக்கள் ........................................ மருந்து.
4. ஆலயம் ........................................ சாலவும் நன்று.
5. ஐயம் புகினும் ........................................ செய்.
6. அன்னையும் பிதாவும் ........................................ தெய்வம்.
7. ஆலயம் தொழுவது ........................................ நன்று.

## 1.4 சிந்தித்தலுக்காச் செவிமடுத்தல்

### 1.4.1 செவிமடுக்கும் விடயங்கள் தொடர்பாகச் சிந்தித்தல்

குதிரையும் கழுதையும் துணிச் சுமைகளை சுமந்து சென்றன. கழுதை, "ஏ! குதிரையே! உன் சுமைகளுள் இரண்டை நீ எனக்குத் தந்தால் நீ சுமக்கும் எண்ணிக்கையை நானும் சுமப்பேன்" என்றது.

இதைக் கேட்ட குதிரை.

"கழுதையாரே! உன் சுமைகளுள் நீர் ஒன்றைத் தந்தால் நான் உம்மைப் போல் இரண்டு மடங்கு சுமப்பேன்" என்றது. அப்படியானால் ஒவ்வொன்றும் எத்தனை சுமைகள் சுமந்தன?

<u>விடுகதைகள்</u>

1. வெளியில் போகும்போது நண்பன் வீட்டிற்குள் வந்தால் விரோதி. அவன் யார்?
2. நீந்தத் தெரியும் மீனல்ல நடக்கத் தெரியும் மனிதனல்ல இறக்கையுண்டு தேனீயல்ல இறகு கொண்டு பறக்காது. அது என்ன?
3. வானம் விடும் கண்ணீர் எது?
4. மேலே பறப்பவனுக்கு கீழே கடிவாளம். அது என்ன?
5. மீன் பிடிக்கத் தெரியாது. ஆனால் வலை பின்னுவான். அவன் யார்?

## சேர். பொன். இராமநாதன்

ஈழ நாட்டின் தவப்புதல்வர்களுள் சேர். பொன். இராமநாதன் அவர்களும் ஒருவர் ஆவர். இவர் கல்வி அறிவு, மதிநுட்பம், பேச்சுத்திறன், சைவப்பற்று ஆகிய உயர்ந்த குணங்களை கொண்டிருந்தார். பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த படித்த பிரமுகர்களுள் ஒருவராக இவர் விளங்கினார். இவரது பெருமைகளை எம்மால் விபரித்துச் சொல்ல முடியாது. இவர் யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாயில் பிறந்தார். கொழும்பில் கல்வி கற்றார். இலங்கையின் சுதந்திரத்துக்காக பாடுபட்டவர்களுள் சேர். பொன். இராமநாதன் அவர்களுக்குத் தனியிடமுண்டு. இவர் நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்காக பல சேவைகள் செய்துள்ளார்.

**மேலேயுள்ள கட்டுரையை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. ஈழநாட்டுப் பெரியர் ஒருவரின் பெயர் என்ன?

   ........................................................................................................................

2. இவர் எங்கு பிறந்தார்?

   ........................................................................................................................

3. இவர் எங்கு கல்வி கற்றார்?

   ........................................................................................................................

4. இவரின் பண்புகள் மூன்று கூறுக?

   ........................................................................................................................


5. இவர் நாட்டு மக்களுக்காக யாது செய்தார்?

   ........................................................................................................................

## புரிந்து கொண்டால்

எங்கள் நாடு இன்ப வீடு
என்றே உணர்ந்திடுவோம் – இதனை
நன்றே உணர்ந்திடுவோம் – இந்த
இன்ப வீட்டில் வாழும் சோதரர்
இனியார் நாம் அறிவோம் – இந்த
எண்ணத்தைப் பெறுவோம்!

இனமும், ஏற்கும் சமயமும், மொழியும்
ஏற்றந் தருவனவாம் – ஏற்போர்க்
கேற்றந் தருவனவாம் – இவற்றின்
பெயரைச் சொல்லிப் பிளவைப் பெருக்கல்
பேதையர் செயலாம் – உதவாப்
பேதையர் செயலாம்!



எங்களில் மோதல் காணும் போது
கனிவாய் ஆய்ந்திடுவோம் – நுணுகிக்
கனிவாய் ஆய்ந்திடுவோம் – நியாயப்
பொருத்த மெங்குண்டோ அங்கு
விட்டுக் கொடுத்திடுவோம் – பேதம்
விரட்டி யோட்டிடுவோம்!

**மேலே உள்ள கவிதையை வாசித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

1. கவிதையின் தலையங்கம் யாது?

   .......................................................................................................................

2. நாம் அனைவரும் எத்தகையவர் எனக் கூறப்பட்டுள்ளது?

   .......................................................................................................................

3. பேதையரின் செயல் யாது?

   .......................................................................................................................

4. நுணிகி கனிவாய் ஆய்ந்திடப்படுவது எது?

   .......................................................................................................................

5. எதற்காக விட்டுக் கொடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது?

   .......................................................................................................................

## 1.4.2 செவிமடுத்த விடயங்களிடையே தொடர்பு காணல், எதிர்வு கூறல்

மாணவர்களே! வானொலி, தொலைக்காட்சி, புதினப் பத்திரிகை என்பவற்றினுடாக நீங்கள் அறிந்த பிரயோசனமுள்ள விடயங்களை உங்களது நண்பர்களுக்கும் அறியும் வண்ணம் ஒழுங்குபடுத்திக் கூறுவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். இதனால் உங்களது பொது அறிவு விருத்தியாகும். நண்பர்களும் ஆசிரியர்களும் உங்களை மிகவும் விரும்புவார்கள்.

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஆகியவற்றில் சிறுவர்களுக்கான பகுதிகள் பிரத்தியேகமாக உள்ளதை நீங்கள் அறிவீர்களல்லவா? அவற்றின் மீது உங்கள் கவனத்தை வைத்திருங்கள்.

**கிரகித்தவற்றை தேவைக்கும், சந்தர்ப்பத்திற்கேற்ப மீண்டும் பயன்படுத்தல்.**

இவ்வாறு நீங்கள் அறியும் விடயங்கள் நாட்கள் செல்லச் செல்ல மறக்கப்பட்டு விடலாம். எனவே அவற்றைக் குறித்து வையுங்கள். வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நாடாக்களில் பதிவு செய்து வைக்கலாம். பத்திரிகைச் செய்திகளாயின் அவற்றைக் கத்தரித்து வைத்திருக்கலாம்.

அல்லது ஒரு குறிப்புப் புத்தகத்தை கையாளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இந்தப் பழக்கங்கள் உங்களது பிற்கால வாழ்க்கைக்கு மிகவும் உதவியாக இருக்கும். உயர் வகுப்புக்களில் ஆய்வுகள் செய்பவர்கள் இவ்வாறே செயல்படுகிறார்கள். எனவே நீங்கள் சிறுவயதிலிருந்தே இவ்வாறு பழக்கப்படுத்தி கொள்வது உங்களது உயர்கல்விக்கு மிகவும் உதவிக்கரமாக இருக்கும்.

# 2.0 பேசுதல்

## 2.1.1 நட்புறவுடன் உரையாடுதல்

**முதலாம் மாணவன்**

எனது வீட்டில் ஒரு வீட்டுத்தோட்டம் இருக்கிறது. அத்தோட்டத்தில் மிளகாய்க் கன்றுக்களை நாட்டியுள்ளோம்.

**இரண்டாவது மாணவன்**

எங்கள் வீட்டில் அழகிய பூந்தோட்டம் இருக்கிறது. அத்தோட்டத்தில் உள்ள மல்லிகைப் பூக்களைப் பறித்து நாங்கள் மாலை கட்டுவோம்.

**மூன்றாவது மாணவன்**

எங்கள் வீட்டில் நாங்கள் கோழிகளை வளர்க்கின்றோம். எங்களிடம் ஐம்பது கோழிகள் இருக்கின்றன.

மாணவர்களை நட்புறவுடன் சுதந்திரமாக உரையாட வழிப்படுத்தும்போது அவர்களிடம் இயல்பாகப் பேசும் ஆற்றலை வளர்க்க முடியும்.

மற்றவர்களுடன் பேசும் போது கருத்துக்கள், உணர்ச்சிகள், செய்திகள் முதலியவற்றை தெளிவாகவும், விளக்கமாகவும் , ஒழுங்குமுறையாகவும் திட்டமிட்டு எவ்வாறு வெளிப்படுத்தலாம் என்பதை உதாரணங்களுடன் விளக்கி அவ்வாறு பேச வழிப்படுத்துக.

## 2.1.2 கதைகளை மெய்ப் பாடுகளுடன் கூறுதல்.

### புத்திமான் பலவான்

கோபாலன் புத்தி உள்ள சிறுவன். அவன் ஒரு நாள் கடற்கரையில் விளையாடினான். அப்போது கடலில் ஒரு சிறிய சாடி மிதந்து வந்தது. அதைக் கோபாலன் எடுத்தான். அதன் மூடியை ஆவலோடு திறந்தான். உள்ளருந்து உருவம் ஒன்று வெளியே வந்தது.

அந்த உருவம் வளர்ந்து வளர்ந்து பெரிய அரக்கன் ஆனது. கோபாலன் வியப்பு அடைந்தான். "நீ யார்"? என்று கேட்டான். அரக்கன், "நான் உன்னை விழுங்க வந்தேன்" என்று சொல்லிக்கொண்டு கிட்ட நெருங்கியது.

கோபாலன் அஞ்சாமல், "அடே, இவ்வளவு பெரியவனான நீ இந்தச் சிறிய சாடிக்குள் எப்படி இருந்தாய்? ஒரு முறை இருந்து காட்டு பார்ப்போம்" என்றான். அரக்கன் சிறியவனாகிச் சாடியினுள் நுழைந்தான். உடனே போகாலன் அதனை இறுக்கி மூடிக் கடலில் எறிந்தான்.

### சுப்பிரமணிய பாரதியார்

தென்னிந்தியாவிலுள்ள எட்டய புரத்திலே சுப்பிரமணிய பாரதியார் பிறந்தார். அவருடைய தந்தையாரின் பெயர் சின்னச்சாமி ஐயர். தாயாரின் பெயர் இலக்குமி அம்மாள். பாரதியார் இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார் இம்மொழிகளுள் அவருக்குத் தமிழிலேயே மிக விருப்பம் இருந்தது.

இவரின் திறமையைக் கண்டு சமஸ்கிருத புலவர்கள் இவருக்கு "பாரதி" என்ற பட்டத்தைச் சூட்டினார்கள். இவர் ஓர் சிறந்த புலவரானார். இவர் எத்தனையோ வகையான பாடல்களைப் பாடினார். ஓடி, விளையாடு பாப்பா,அச்சமில்லை அச்சமில்லை என்ற பாடல்கள் அவற்றுள் சிலவாகும்.

பாரதியார் மெலிந்த உருவம் உடையவர். தடித்த மேற்சட்டையும். தலைப்பாகையும் அணிந்திருப்பார்.

1. பாரதியார் பிறந்த ஊர் எது?

..................................................................................................................................

2. அவரது பெற்றோர் யார்?

..................................................................................................................................

3. பாரதியார் கற்ற மொழிகள் எவை?

..................................................................................................................................

4. பாரதியார் எத்தகைய உருவம் உடையவர்?

..................................................................................................................................

5. அவர் பாடிய பாடல்கள் உ தருக?

..................................................................................................................................

## 2.1.3 விடுகதைகள், புதிர்களை விருப்புடன் முன்வைத்தல்

1. ஆடி ஆடி நடப்பான். அரங்கத்தில் நடப்பான். அவன் யார்.
2. ஆனை விரும்பும்ஓ சேனை விரும்பும்ஓ
   அடித்தால் வலிக்கும். கடித்தால் இனிக்கும். அது என்ன?
3. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் தூசி கிளம்பாது. அது என்ன?
4. இவன் அழுதால் உலகம்சிரிக்கும். அவன் யார்?
5. ஊசி போல் இருப்பான். ஊரையே எரிப்பான். அவன் யார்?

**விடைகள்:-** 1. யானை 2. கரும்பு 3. எறும்பு 4. வானம் 5. தீக்குச்சி

**ஓர் எழுத்துப் புதிர்.**

1. சிரித்துக் கொண்டே இருக்கும் எழுத்து.
2. கேட்டுக் கொண்டே இருக்கும் எழுத்து.
3. துரத்திக் கொண்டே இருக்கும் எழுத்து.
4. தொட்டால் சுடும் எழுத்து.
5. எப்போதும் வலியால் துடிக்கும் எழுத்து.
6. தேனீக்களுக்கு விருந்து கொடுக்கும் எழுத்து.

**விடைகள்:-** ஈ தா போ தி கூ பூ

**1. கீழ்க்காணும் விடுகதைகளுக்கான விடைகளை எழுதவும்.**

1. தொப்பென விழுந்தன், தொப்பி கழன்றான். அவன் யார்? ......................
2. எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுத்து, வட்டக்குடை பிடித்து வாறாராம் வன்னியனர். அவர் யார்?......................
3. வெள்ளைக் காரனுக்கு கறுப்புத் தொப்பி. அது என்ன? ......................
4. காய்ப்பார், பூப்பார், கலகலப்பார், காகம் இருக்க கொப்பில்லை. அது என்ன? ......................
5. எலும்பு இல்லாதவனுக்கு முப்பத்திரெண்டடு பேர் காவல். அது என்ன? ......................
6. ஒரு குப்பிக்குள் இரண்டு நிற எண்ணெய் அது என்ன? ......................
7. எல்லோரும் எதிர்பார்க்கும் பால், குடிக்க முடியாத பால், அது என்ன? ......................
8. வெட்டலாம், கட்டலாம், வீட்டுக்கு கொண்டு செல்லமுடியாது. அது எது? ......................

**2. கீழ்க்காணும் புதிர்களை விடுவியுங்கள்**

1. நன்னுவார், தின்னமாட்டார். அவர் யார்? ......................
2. ஓட ஓட நீண்டு செல்வான். அவன் யார்? ......................
3. ஒரு வட்டத்துக்குள் பன்னிரண்டு வீரர்கள் அரசிக்கும் அரசனுக்கும் காவல்? ......................
4. எண்ணெய் இல்லாமல் ஓடும் வண்டி எது? ......................
5. காட்டுக்குள்ளே கறுப்பியும் சிவப்பியும் ஒரே இடத்தில் உள்ளனர். அவர்கள் யார்? ......................
6. கால்கள் இருந்தும் ஓட முடியாமல் ஊர்வான். அவன் யார்? ......................
7. பார்த்தால் முள், வெட்டினால் சக்கை, உரித்தால் முத்து, அது எது? ......................
8. இரவிற்கு ஆயிரம் கண்கள், பகலுக்கு ஒருகண். அவை எவை? ......................

**3. கீழ்க்காணும் பழமொழிகளில் உள்ள கீறிட்ட இடங்களுக்கு சரியான சொல்லை தரப்பட்ட சொற்களில் இருந்து தெரிவு செய்து நிரப்புக.**

திரண்டால், உப்பிட்டவரை, முகத்தில், காலை, அழுத, இக்கரை, பூனை, அமாவாசை, சுரைக்காய், சுடுகாடு

1. அகத்தின் அழகு .......................... தெரியும்.
2. .......................... பிள்ளை பால் குடிக்கும்.
3. அடம்பன் கொடியும் .......................... மிடுக்கு.
4. ஆழம் அறியாமல் .......................... விடாதே.

**எழுதுங்கள்**

அறிவுடையாரை அரசனும் விரும்புவான்

5. அக்கரைக்கு ......................... பச்சை.

6. ......................... உள்ளளவும் நினை.

7. ஏட்டுச் ......................... கறிக்கு உதவுமா?

8. ஐயர் வருகிறவரை ......................... காத்திருக்குமா?


9. சூடு கண்ட ......................... அடுப்பங்கரை நாடாது.

10. தொட்டில் பழக்கம் ......................... மட்டும்.


## மீன்கள்

புள்ளி உள்ள மீன்கள்
பார்க்க அழகு மீன்கள்
துள்ளித் துள்ளி நீரில்
திரியும் நல்ல மீன்கள்

மஞ்சள் சிவப்பு நிறத்தால்
மனதைக் கவரும் மீன்கள்
மிஞ்சும் உணவைப் போட்டால்
மிதந்து வரும் மீன்கள்



நீரில் உள்ள அழுக்கை
நிதமும் சுத்தம் செய்யும்
நீரில் கூடி வாழ்ந்து
நிம்மதி காணும் மீன்கள்.



**உதாரணமாக சாத்திரக்காரி ஒருத்தி தெருவில் கூவிக்கொண்டு செல்வது போலநடித்தல்**

சாத்திரக்காரி : சாஸ்திரம்......... சாஸ்திரம்........சாஸ்திரம் பார்க்கலையா! அம்மா வாங்க, ஐயா வாங்க! உங்களுக்கு நல்ல காலம் வரப் போகுது, ஐயாவுக்கு அதிஸ்டம் வரப் போகுது! கையைக் காட்டுங்க, ஐயா.....கையைக் காட்டுங்கள்!

**பயிற்சி**

1) நீர் ஒரு புதிய இடத்திற்கு செல்லும் போது, அவ்விடத்துக்குச் செல்லும் பாதையைப் பற்றி ஒருவரிடம் எவ்வாறு கேட்பீர் என்பதைக் கீழ்காணும் கோட்டில் எழுதுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**எழுதுங்கள்**

அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்

உ) இரண்டு மாணவர்கள் தங்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்யும் முறையினை உமது சொந்த நடையில் எழுதுக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

3) மாணவர்களுக்கு "இளமையில்கல்வி அவசியம்" என்பதைப்பற்றி ஐந்து வாக்கியங்கள்எழுதுக.

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

## 2.2 தெளிவான உச்சரிப்புடன் பேசுதல் / பாடுதல்

### 2.2.1 மெய்பாடுகளுடன் பேசுதல். கதை கூறல்

பேச்சு மொழியைச் செம்மையான மொழியாக்கிப் பேசுவதற்கு ஆசிரியர் மாணவர்களுக்கு உதவி புரிய வேண்டும். வகுப்பறைக்கு வெளியே பேச்சுக்களைக் கேட்கவும், பலதரப்பட்ட மக்களோடு உரையாடவும், வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம்.

உதாரணமாக, சந்தைக்கு அழைத்துச் சென்று அங்கு நிகழும் உரையாடல்களை அவதானிக்கச் செய்து. பின்பு வகுப்பறையில் அவர்கள் செவிமடுத்த விடயங்களை நல்ல தமிழிலே கூறச் செய்யலாம். திருத்தமற்ற சொற்களைக் கையாளும் வேளைகளில் அவற்றைத் திருத்திச் செம்மையாகப் பேசுவதற்குப் பயிற்சியளிக்கலாம். பேசும் ஆற்றலை வளர்ப்பதற்கு நாடகங்கள், உரையாடல்கள் என்பன உதவி புரியும்.

மேலும் ஒரு பொருளை மையமாக வைத்து அதனைப் பற்றி ஒவ்வொரு மாணவரிடையேயும் ஒவ்வொரு வினாவை ஆசிரியர் வினாவலாம். பலரும் பலவிதமான கருத்துக்களைக் கூற பேசுதல் திருத்தமடையும்.

**சில சொற்களின் சரியான வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**


| | | | |
|---|---|---|---|
| அகப்பை | கத்தரி | தலைமை | பொய்மை |
| அடமானம் | கலாச்சாரம் | தாழ்வாரம் | மண்ணெண்ணெய் |
| அரிவாள் | கார்த்திகை | நாகரிகம் | முகூர்த்தம் |
| ஆட்சி | குளிகை | நிலைமை | முயற்சி |
| இயற்கை | சம்பந்தம் | நோன்பு | முற்றம் |
| இளநீர் | சமையல் | பரீட்சை | வயது |
| உபவாசம் | சுதந்திரம் | பலாப்பழம் | வியர்வை |
| உயிர் | செய்தி | பாகற்காய் | விரதம் |
| உற்சவம் | தண்ணீர் | பிரயாணம் | வெங்காயம் |
| உடைமை | சொப்பனம் | புடைவை | வெட்கம் |

## 2.2.2 தாளலயத்துடன் பாடுதல், ஆடிப் பாடுதல்

### கீதம் பாடுமே




வண்ண வணணப் பூக்களிலே
வண்டு வந்து மொய்க்குமே
எண்ணம் போல மதுவுண்டு
இனிய கீதம பாடுமே




சிவந்த சொண்டை நீட்டியே
சின்னக் கிளியும் கேட்குமே
உவந்து தந்த கனிகளை
உண்டு மழலை பேசுமே

### அம்புலி

எங்கேயெங்கே ஓடுகிறாய் – அம்புலியே
நான் கடல் மேல் ஓடுகிறேன் – பிள்ளைகளே

ஆரிடத்தில் அன்புடையாய் – அம்புலியே
அன்பர் மேலே அன்புடையேன் – பிள்ளைகளே

ஓடி ஓடித் திரிகிறாயே – அம்புலியே
உறக்கமில்லையோவுனக்கும் – அம்புலியே

### வெண்ணிலா

இரு விளக்கில் ஒரு விளக்காம் வெண்ணிலாவே
இராக்காலத் தொனி கொடுப்பாய் வெண்ணிலாவே

சூரியன் போய் மறைந்த பின்பு வெண்ணிலாவே
தூயவொளி பரப்பிடுவாய் வெண்ணிலாவே

## 2.2.3 கருத்தொன்றை அழுத்தி பேசுதல்

**சொற்றொடர்**

பழம் நழுவிப் பாலில் விழுந்தது
குரங்குக்கும் தன் குட்டி பொன்குட்டி
வாழைக்குலைகளை வாகனத்தில் ஏற்றி இறக்கினார்கள்.

மேற்குறிப்பிட்ட சொற்றொடர்களை மாணவர்கள் மீண்டும் மீண்டும் கூறச் செய்க. அவர்கள் உச்சரிப்பில் பிழை விடும் இடங்களில் திருத்தி சரியான முறையில் உச்சரிக்க வழிப்படுத்துக.

## 2.2.4 ஒலிவேறுபாடுகளை அநுசரித்து பேசுதல்

**ரகர, றகர வேறுபாடுகள**

1. கரி – கரி பாரம் தூக்கியது.
   கறி – அம்மா மீன் கறியுடன் உணவூட்டினாள்.
2. மரி – கிறிஸ்துநாதர் பாவிகளுக்காக மரித்தார்.
   மறி – செல்வந்தனைத் திருடர்கள் வழி மறித்தனர்
3. குரை – நாய் குரைத்ததைக் கேட்டதும் திருடன் ஓடினான்.
   குறை – மற்றவர்களது குற்றம் குறைகளை நாம் மன்னித்தல் வேண்டும்.
4. அரை – அம்மா மிளகாய் அரைத்தாள்.
   அறை – எனது படுக்கை அறை என்றும் சுத்தமாக இருக்கும்.

**லகர, ளகர, வேறுபாடுகள்.**

1. வளி – வாகனக் கழிவுகளால் வளி மாசடைகிறது.
   வலி – அந்தக் காயம் ஏற்படுத்திய வலியால் அவள் மிகவும் துடித்தாள்.
2. விலா – விலா எலும்பு முறிந்து விட்டது.
   விளா – விளாம்பழம் சுவையாக இருக்கும்.
3. விலை – விலைவாசி உயர்வினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.
   விளை – வரட்சி காரணமாக நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டது.
4. இலை – இலை குழைகளால் வேயப்பட்டது எனது குடிசை.
   இளை – நோய் காரணமாக அவன் இளைத்திருந்தான்.
5. கிலி – யானை கிராமத்தினுள் புகுந்ததால் மக்கள் கிலி கொண்டு ஓடினர்.
   கிளி – கிளி பழம் உண்டது.

**ழகர, ளகர வேறுபாடுகள்**

1. அழி – கலகக்காரர்கள் எனது வீட்டை அழித்து விட்டனர்
   அளி – பாரி முல்லைக்கு தனது தேரை அளித்தான்.
2. ஒழி – சண்டையின் போது தீயவன் ஒழிந்தான்.
   ஒளி – சூரியஒளி மனிதனுக்கு இன்றியமையாததாகும்.
3. வழி – ஜனாதிபதி வரும் வழி எங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.
   வளி – வளி இன்றி மனிதனால் வாழ முடியாது
4. வாலை – நாய் வாலை ஆட்டியது
   வாளை – கன்னன் வாளை ஓங்கினான்.
   வாழை – வாழை குலை போட்டது.

தலை – தலையில் தொப்பி அணிந்தேன்
தளை – கள்வனுக்கு கையில் தளை (விலங்கு) போட்டனர்.
தழை – ஆடு (இலை) தழை உண்ணும்.

ஒலி – இடிமுழக்கம் கடுமையாக ஒலித்தது.
ஒளி – சிறுவர்கள் ஒளிவிளக்கு ஏற்றி விளையாடினர்.
ஒழி – சிறுவர்கள் ஒழித்து விளையாடினர்.

கிலி – கமலா இருட்டைக் கண்டு கிலி கொண்டு நின்றாள்.
கிளி – கிளி பச்சை நிறமான பறவை.
கிழி – கன்னன் துணியைக் கிழித்தான்.

**ரகர, றகர, சொற்கள் சிலவற்றை அவதானியுங்கள்.**

பரி – வெள்ளைப்பரி (குதிரை) வேகமாக ஓடியது
பறி – கமலா பூ பறித்தாள்

அரி – அரி (சிங்கம்) காட்டில் வாழும்
அறி – அறிவை வளர்ப்பது நமது கடமையாகும்.

அரை – அரைக்கிலோ சீனி வாங்கினேன்.
அறை – எங்கள் வீட்டில் இரண்டு அறைகள் உண்டு.

மரை – மரை காட்டில் வாழும் மிருகம்.
மறை – எங்கள் வீட்டில் இரண்டு பூனைகள் மறைந்திருந்தன.

நிரை – மாணவர்கள் நிரை (வரிசை) யாக நின்றனர்.
நிறை – எனது நிறை (பாரம்) ௨0 கிலோ ஆகும்.

குரை – நாய் குரைக்கும்.
குறை – ஆசிரியர் மாணவனைக் குறை கூறினார்.

**பின்வரும் னகர, ணகர சொற்களை வைத்து வசனம் எழுதும் முறைகளைப் பாருங்கள்.**

ஆனை – ஆனை காட்டில் வாழும் மிருகம்.
ஆணை – அரசன் சேவகனுக்கு ஆணை (கட்டளை) இட்டான்.

வானம் – வானம் நீல நிறமானது
வாணம் – பிள்ளைகள் வாணம் விட்டு விளையாடினர்.

கனி – மாங்கனி (பழம்) மிக இனிமையானது.
கணி – நான் கணிதப் பாடம் கற்றேன்.

எழுதுங்கள்

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

## 2.3 தொடர்பாடலுக்காகப் பேசுதல்

### 2.3.1 தமது தேவைகள், கருத்துகள், எண்ணங்கள் உணர்வுகளை வெளிப் படுத்திப பேசுதல்

**மற்றையவர்களுடன் பேசுதல்**

மற்றையவர்களுடன் பேசும் போது, அவர்களிடத்தில் எம்மைப் பற்றிய நல்லெண்ணம் உருவாகுமாறு பண்புடன் பேச வேண்டும்.

"கோபால் தயவு செய்து உம்முடைய சிவப்புநிறப் பென்சிலை தந்துதவ முடியுமா?"

**உரையாடுதல்.**

மற்றவர்கள் பேசும் போது எவ்வாறு பண்புடன் செவிமடுக்க வேண்டுமெனக் கற்றோம். இனி உரையாடுதலைப் பற்றிப் பார்ப்போம்.

**உணவைப் பேணல் எனும் பாடத்தில் வரும் உரையாடல் ஒன்று**

சந்திரன் – ஏன் அக்கா இவ்வளவு பழங்கள்? நாலைந்து நாட்களில் அழுகிப் போய் விடுமே!

தமக்கை – எங்களுக்கு அவற்றை அழுகாமல் பாதுகாக்கும் முறை தெரியும். ஒவ்வொரு பழத்தையும் நான்காக வெட்டி உப்புத் தடவுவோம்.. பின்னர் வெயிலில் நன்றாகக் காய விட்டு வற்றல் ஆக்குவோம். அதன் பின் அவை பழுதுபடா.

தாய் – தேவையான பொழுது அந்த வற்றலை எடுத்து எலுமிச்சம் புளி சேர்ப்போம். அதனுள் மஞ்சள், வெந்தயம், செத்தல் மிளகாய் ஆகியவற்றின் தூளை இட்டுச் சில நாட்களுக்கு ஊற வைப்போம். ஊறுவதற்குப் புளி போதாவிட்டால் மீண்டும் புளி சேர்ப்போம்.

சந்திரன் – ஓ! அது தானே ஊறுகாய்? நினைக்கவே வாய் ஊறுகிறது. அது சரி! வெட்டிய பழத்திற்கு ஏன் உப்புத் தடவ வேண்டும்.

தந்தை – உப்புச் சில பொருட்களைப் பழுதடையாமல் பாதுகாக்கும். எனவே உப்பிட்டு வெயிலிற் காய வைத்தால் அப்பொருள்கள் பழுதுபடா.

**உதாரணம்**

கருத்து – "நல்லதை நினைத்து நல்லதைப் பேசி, நல்லதைச் செய்தால் நன்மை கிடைக்கும்."

உணர்ச்சி – "ஆகா! எத்தனை அழகு இந்த வெண்ணிலா"

செய்தி – "மிருகக் காட்சிசாலையில் கங்காரு ஒன்று குட்டி ஈன்றிருக்கிறது."

**எழுதுங்கள்**

அறிஞர்க்கழகு கற்றுணர்ந்து அடங்கல்

**உணர்வு வெளிப்பாடு**

குகன் – நான் நகைச்சுவைப் பாடல்களை விரும்பிக் கேட்பேன்.
கீதா – எனக்கு நாட்டியத்தில் தான் விருப்பம்.
அமீர் – எனக்கு கதைகள் கேட்பதில் தான் ஆர்வம்.
மேரி – விடுகதைகள் சேகரிப்பதே எனது பொழுது போக்காகும்.
பிரபு :- ........................................................................

**தேவைகளைக் கூறுதல்.**

– எனக்கு பூக்கள் உள்ள படங்கள் வேண்டும்.
– எனக்கு அறிஞர்களின் படங்கள் வேண்டும்.
– நான் புதிய கணிதக்கொப்பி வாங்க வேண்டும்.

**தகவல்கள்**

கடினமான வேலைகளுக்கு 'ரோபோக்களை' பல நாடுகளில் பயன்படுத்துகின்றனர். ஆனால் ஜப்பானில் ரோபோ செல்லப் பிராணிகளுக்கு மதிப்பு அதிகம். இந்தச் செல்லப் பிராணிகள் நடக்கவும், ஓடவும், மெல்ல பேசவும் செய்கின்றன.

– உலகில் மிகவும் மெதுவாக நகர்ந்து செல்லக்கூடிய பிராணி நத்தைதான்.
– உலகில் அதிகமான மக்களால் பேசப்படுவது சீன மொழியாகும். இரண்டாவது இடம் வகிப்பது ஆங்கிலம்.

**செய்திகள்**

– இன்று நாடு முழுவதும் மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.
– நாளை நாடு முழுவதும் போலியோ தடுப்பு மருந்து வழங்கப்பட இருக்கிறது.

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்து கொண்ட செய்திகளை, தகவல்களை பரிமாறிக் கொள்ள மாணவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் பேசும்திறனை வளர்க்க முடியும்.

## 2.3.2 தகவல்களை, அனுபவங்களை பரிமாறிக் கொள்ளுதல்

வாசிக்கும் பழக்கம் தகவல்களைத் திரட்ட உதவியாக இருக்கும். உதாரணமாக உங்களது ஆசிரியர் விளையாட்டுகளைப் பற்றி கற்பிக்கும் போது உலகில் நடக்கின்ற பெரும் விளையாட்டு போட்டிகளைப் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

உதாரணம் :- ஒலிம்பிக் விளையாட்டு போட்டி
சார்க் விளையாட்டு போட்டி
உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி

**எழுதுங்கள்**

அலை கடலுக்கு அணைபோட முடியுமா

### 2.3.3 தகவல்களை பரிமாறிக் கொள்ளுதல்

மாணவர்களே, உங்களது பாடசாலையில் நடந்த விழாக்கள், கூட்டங்கள் ஆகியவற்றில் நடந்தேறிய விடயங்களை முறைப்படி அறிக்கைகளாக தயாரித்து பழகுங்கள். அவ்வாறே உங்கள் ஊரிலுள்ள மன்றங்களிலும் உங்களது பங்களிப்பைச் செலுத்துங்கள். அந்த நிகழ்ச்சிகளின் தகவல்களை மற்றொருவருக்கும் எடுத்துக் கூறுங்கள்.

### 2.3.4 அனுபவத்தை ஒழுங்கு முறைப்படுத்தி கூறுதல்

**நான் கடற்கரைக்குப் போனேன்**

நான் எனது அம்மாவுடன் நேற்றுப் பின்னேரம் கடற்கரைக்குப் போனேன். பால் போன்ற மணலில் கால் புதையப் புதைய நடந்தேன். அந்த மணலில் சிப்பிகளைக் கண்டேன். அழகான சிப்பிகள் சிலவற்றைப் பொறுக்கி எடுத்தேன். கடல் ஆரவாரம் செய்து கொண்டிருந்தது. அலைகள் அடுத்தடுத்து வந்து கரையில் மோதின. கடல்காற்று ஜில்லென்று உடல் மீது இதமாகப் பட்டது. என்னைப் போன்ற சிறுவர்கள் சிலர் கடற்கரையில் பட்டம் பறக்க விட்டுக் கொண்டிருந்தார்கள்

மேலே கூறியதைப் போன்ற பல அனுபவங்களை நீங்கள் அடைந்திருப்பீர்கள் அல்லவா? அவற்றைப் பற்றி எழுதுங்கள்.

**எனது பிரயாணம்**

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

**எங்கள் பாடசாலை விளையாட்டுப் போட்டி**

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................

**நான் பார்த்த கலைவிழா**

....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................
....................................................................................................

## 2.3.5 தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக வினாக்கள் தொடுத்தல்

உதாரணம் (1) :- மாணவன்: அனைத்து உயிர்ச்சத்துக்களும் நிறைந்த பழம் எது?

ஆசிரியர்: எல்லா உயிர்ச்சத்துக்களும் நிறைந்த பழம் என்று உலகில் எதுவும் கிடையாது. அதிக உயிர்ச்சத்துக்கள் உள்ள பழங்களாக மாம்பழம், பப்பாசிப்பழம், வாழைப்பழம் முதலியவற்றைச் சொல்லலாம்.

உதாரணம் (2) :- மாணவன்: குடிநீரில் குளோரினை ஏன் கலக்கிறார்கள்?

ஆசிரியர்: குளோரின் ஓர் கிருமிநாசினி. குடிநீரில் கிருமிகள் இருந்தால் அவை எமக்கு பலவகை நோய்களை உண்டாக்கலாம். இக்கிருமிகளை அழிப்பதற்கு கிருமிநாசினியாக குளோரினைக் குடிநீரில் கலக்கிறார்கள்.

**எழுதுங்கள்**

ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு

# 3.0 வாசித்தல்

## 3.1 பொறிமுறைகளை அனுசரித்து வாசித்தல்

### 3.1.1. தெளிவான உச்சரிப்பு விளக்கம், குறியீடு, ஒலிபேதங்கள்

நீங்கள் வாசிக்கும் போது, வாசிக்கும் நிலை, புத்தகத்தைப் பிடிக்கும் முறை, தொனி, குறியீடு, மெய்ப்பாடு என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும். வாசிக்கும் போது பிழைகள் விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். திக்கித் திக்கிக் கூறக்கூடாது. திருத்தமான உச்சரிப்புக்களை திரும்பவும் கூறக்கூடாது. குறியீடுகளைக் கவனித்து வாசிக்க வேண்டும். உச்சரிப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

**உதாரணமாக:-**

1. இரைச்சல் என்ற சொல்லை இரைசல் என வாசிக்கக்கூடாது.
2. கூறி என்பதை குறி என்று வாசிக்கக்கூடாது.
3. பழப்புளி என்பதை பளப்புலி என உச்சரிக்கக்கூடாது.

இதே போலவே, அறம் என்பதை அரம் அன்றும், நிறம் என்பதை நிரம் என்றும், பணம் என்பதை பனம் என்றும் வாசிக்கக் கூடாது. மாணவர்களே! நீங்கள் பலவிதமான சிறிய கதைகளை வாசிப்பதன் மூலம் சரியான உச்சரிப்புக்களை அறிந்து கொள்ளுங்கள்.

வானொலி, தொலைக்காட்சி என்பவற்றில் செய்தி அறிக்கைகள் பிழைகளில்லாமல், தெளிவாக, விளங்கக்கூடிய முறையில் வாசிக்கப்படுவதை மாணவர்கள் அவதானித்தல் வேண்டும்.

**பின்வரும் உரைப்பகுதியைக் கவனமாக வாசியுங்கன்.**

எங்கள் ஊரில் ஒர் நூல் நிலையம் இருக்கின்றது. அங்கே பல புதினப் பத்திரிகைகளும், நூல்கள் பலவும் இருக்கின்றன. எங்கள் ஊர் மக்கள் அங்கு சென்று பத்திரிகைகளை வாசித்துச் செய்திகளை அறிவார்கள். படிக்கும் மாணவர்கள் அங்கே சென்று புத்தகங்களை வாசிப்பார்கள்.

<u>தெளிவாக வாசித்தல்</u>

மாணவர்கள் ஒவ்வொருவரும் பாடம் 1 இல் 7 ஆவதாக உள்ள பிறந்த நாள் அழைப்பிதழையும், கூட்ட அறிக்கையையும் ஏனைய மாணவர்கள் கேட்கக் கூடிய முறையில் தெளிவாக வாசித்து பழகுவதன் மூலம் பயிற்சி செய்தல் வேண்டும்.

**கீழ்க்காணும் பந்தியை மாணவர்கள் உரத்து தெளிவாக வாசிக்கவும்.**

<u>வான்கோழியும் கானமயிலும்</u>

மாளிகையொன்றின் புறத்தே ஒரு குப்பை மேட்டிலே, ஒரு வான்கோழியின் நடனம் நிகழ்ந்தது. அதனைக் கோழிக்குலமும், காகக் கூட்டமும் கண்டு களித்தன. "ஆகா, இது

அற்புதம், அற்புதம்!'' என்று பாராட்டின. அணி பல அணிந்து, அலங்கரித்து வான் கோழியைப் பறவைச் சாதியின் அரசனாக்கி, அதற்கு முடி புனைய வேண்டுமென்று கூறின. இவ்வாறு வீட்டுப்பறவைகளாற் புகழப்பட்ட வான்கோழி காட்டுப் பறவைகளின் புகழையும் பெற விரும்பியது.

ஒரு நாள் அது செருக்குடன், கம்பீர நடை நடந்து, ஒரு கானகத்தையடைந்தது. அக்கானக மத்தியிலே பசும்புல்லரங்கிலே மயில் தன் வண்ணப் பசுந்தோகையை விரித்து ஆடியது. வாகை. வன்னி, முதலிய மரங்களிலே இருந்த கிளி, நாகணவாய், மரங்கொத்தி முதலிய பறவைகள் அதைக் கண்டு களித்தன. வான்கோழியும் கண்டது. கோலமயிலின் கூத்தைக் கண்ட வான்கோழி பொறாமையால் மனம் கொதித்தது. தானும் அரங்கிலே ஏறி ஆடவிரும்பி, என்னழகைப் பாரீரஹ என் ஆட்டத்தையும் பாரீர் என்று பறவைகளை நோக்கிக் கூறிக்கொண்டு சுழன்று சுழன்று ஆடியது. அதனைக் கண்ட பறவைகள் கலகலத்து இகழ்ந்தன.

இந்நிகழ்ச்சியை அவ்வழியால் வந்த ஔவையாரும் பார்த்தார். அவருக்குச் சிரிப்பு உண்டானது. மயில் ஆடியதைப் பார்த்து இந்த வான் கோழியும் ஆடுவதாக அவர் எண்ணினார். மயிலின் அழகும் ஆடலும் இப்பொல்லா வான்கோழிக் குளவாமோ? முட்டை எனத்தனக்குப் பெயரிடும் பொய்ய மொழிப் புலவரிடம் பாடல் கொண்ட சோலைக்குமரன் மலைமகள், மைந்தன், முக்கணான் புதல்வன் விரும்பி ஊர்ந்த மயிலுக்கு பறவைகளின் அரசனுக்கு வான்கோழி ஈடாக முடியுமா? ஆயினும், அறிவுடையவர்கள் போலப் பாவனை காட்டும் அறிவீனர்களுக்கு இந்நிகழ்ச்சி நல்லதோர் உவமையாகும் என்னும் எண்ணம் அவருள்ளத்திலே தோன்றிற்று. அப்போது அவர் பாடிய பாடல் பின்வருமாறு:-

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் – தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

## 3.1.2 ஒலி வேறுபாடுகளைத் தெளிவு படுத்தி வாசித்தல்.

பிள்ளைகளே! நீங்கள் உச்சரிக்கும் போது ஒலி வேறுபாடுகளில் கூடிய கவனம் செலுத்துதல் அவசியமாகும். பின்வரும் ஒலி வேறுபாடுகளை அவதானியுங்கள்.

லகர, ளகர, ழகர, ரகர, றகர, னகர, ணகர, நகர

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பலம் | பழம் | 7. | மரம் | மறம் |
| 2. | குளம் | குலம் | 8. | பரவை | பறவை |
| 3. | குழம்பு | குளம்பு | 9. | மனம் | மணம் |
| 4. | அலகு | அழகு | 10. | அனல் | அணல் |
| 5. | தலம் | தளம் | 11. | கனம் | கணம் |
| 6. | அரம் | அறம் | 12. | நகரம் | நகரம் |

வாசிக்கும் போது எதனை வாசிக்கிறோம் என்பதற்கமைய உணர்ச்சி மெய்ப்பாடுகள் தோன்ற ஒலித்து வாசிக்க வேண்டும். ஆசிரியரும் மாணவரின் கண்நகர்வு, தலையசைவு, விரல் வைத்தது வாசித்தல் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும். பல பந்திகளை வாசிப்பதன் மூலம் உச்சரிப்புக்களின் ஒலி வேறுபாடுகளை தெளிவுபடுத்த முடியும்.

அகர வசரிசைப்படுத்தப்பட்ட சொற்களஞ்சியத்தைக் கவனியுங்கள். இதனைப் பலமுறை உச்சரித்து வாசியுங்கள்

| | | |
|---|---|---|
| அழகு | கட்டுரை | மங்களம் |
| அபிவிருத்தி | கடமை | மலர் |
| ஆலய மணி | காயம் | மாணிக்கம் |
| இல்லாள் | கிரௌஞ்சம் | மும்மரம் |
| ஈயக் குண்டு | கீசகன் | மேம்பாடு |
| உழவன் | குயிலிசை | மௌனம் |
| ஊசிமுனை | கூற்றுவன் | வடிவேலன் |
| எலுமிச்சை | சந்தனம் | வாழை |
| ஏறுமயில் | சாயங்காலம் | விவசாயி |
| ஐயம் | சுடம் | வீர புருஷன் |
| ஒத்துழைப்பு | செந்தமிழ் | வெகுளி |
| ஒற்றுமை | பிரச்சினை | வேட்டை |
| ஓசை | புத்தகம் | தனயன் |
| ஔடதம் | பௌர்ணமி | தாயகம் |

### 3.1.3 மெய்ப்படுகளுடன் வாசித்தல்

1. முற்றுப்புள்ளி – ( . )
2. காற்புள்ளி – ( , )
3. வினாக்குறி – ( ? )
4. வியப்புக்குறி – ( ! )
5. மேற்கோள்குறி – ( "......" )

மாணவர்கள் ஒலிவேறுபாடுகளை அனுசரித்து வாசிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட சொற்களையும், வாக்கியங்களையும் மீண்டும் மீண்டும் வாசிக்க வழிப்படுத்துக.

**உதாரணம்:-** **சொற்கள்**

கல்விச்செல்வம், மரியாதை
காளை, காலை, விலங்குகள்
மகிழ்ச்சி, வளர்ச்சி, கேள்வி
பயறு, பருப்பு, அன்னாசிப்பழம்
பார்வை, குணங்கள், விமானம்
வாழ்க்கை, குதிரை, கிராமம்
அறிவு, பல்கலைக்கழகம், தாளம்
இரக்கம், இளைஞர்கள்.

**எழுதுங்கள்**

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே

**வாக்கியங்கள்**

1. உனக்கு இரக்கம் இல்லையா?
2. ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் கிரேக்க நாடாகும்.
3. மலைப்பாங்கான பிரதேசங்களிலேயே தேயிலை செழிப்பாக வளரும்.
4. மனிதனது தேவைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்டது கணனியாகும்.
5. விபத்து என்பது எதிர்பாராது நிகழக்கூடியது.

**மனித நேய, சமூக உறவு விருத்திக்காக பேசுதல்.**

ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ள உதவுவது பேச்சாகும். நல்ல பேச்சு வன்மை உள்ளவனுக்கு நண்பர்கள் அதிகமாக இருப்பர். அன்பு விருத்திக்கும் சமூக ஒற்றுமைக்கும் பேச்சு உற்ற துணையாகும். மக்கள் மக்களுடன் பேசுவதன் மூலம் கலை, கலாச்சாரம் என்பன விருத்தியாகின்றன.

## பயிற்சி

**1. கீழ்க்காணும் சொற்களை அவதானித்து கீறிட்ட இடங்களை நிரப்புக.**

பேசுவதனால், அன்பு, பேச்சு, கடைக்காரருக்கும், விரும்பியவருடன், தமது, அன்பாகப் பேசி.

1. அயலவர்களுடன் ............................. பழக வேண்டும்.
2. ஆசிரியர், மாணவர்களது ............................. த்திறனை வளர்க்க பாடுபடுவர்.
3. மாணவர்கள் மாணவ மன்ற கூட்டங்களில் ............................. பேச்சுத்திறனை வளர்க்கலாம்.
4. க்டைகளில் பொருள் வாங்குவோருக்கும் ............................. இடையே பேச்சு வார்த்தை நடைபெறும்.
5. தொலைபேசி மூலம் எமக்கு ............................. உரையாட முடியும்.
6. ............................. மூலம் மனித நேயத்தை வளர்க்கலாம்.
7. கூட்டங்களில் ............................. எமக்கு மனக்கூச்சம் தெளிவடையும்.

## 3.2 கிரகித்தலுக்காக வாசித்தல்

### 3.2.1 தெளிவான உச்சரிப்பு விளக்கம், குறியீடு, ஒலிபேதங்கள்

பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் காலைக் கூட்டத்தில் உரையாற்றுவதை அவதானத்தோடும், பணிவுடனும் செவிமடுத்தல் வேண்டும் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். பிள்ளைகளே! பாடசாலையில் பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டு போட்டிகள் என்பவற்றின் போது ஆற்றப்படும் உரைகளையும், கோவில்களில் சமயத் தலைவர்கள், சான்றோர்கள் ஆகியோர் பேசுவதையும் பண்புடனும். பணிவுடனும் செவிமடுத்து திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மாணவர் மன்ற நிகழ்ச்சிகளில் தலைவர் உரை, கூட்ட அறிக்கை, சொற்பொழிவுகள், உரையாடல்கள், கதை நாடகம், விவாதங்கள், பரிசளிப்பு விழாக்களில் அதிபரின் உரை, பிரதம விருந்தினரின் சிறப்புரை, கலை நிகழ்ச்சிகள், தேசிய கீதம், பாடசாலைக் கீதம், விளையாட்டுக்கள் பற்றிய அறிவிப்புக்கள் என்பனவற்றை அவதானித்து செவிமடுத்து பின்

வகுப்பறையில் அவை பற்றிக் கலந்துரையாடல் வேண்டும். இவை யாவற்றையும் வகுப்பறையில் மீட்டல் செய்வதற்கு ஆசிரியர் உதவ வேண்டும்.

## பயிற்சி

1. முதல் நாள் மாலை 6.30 மணிக்கு ரூபவாஹினியில் வாசிக்கப்பட்ட செய்தி அறிக்கையை எழுதுமாறு உங்கள் ஆசிரியர் உங்களைக் கேட்டுள்ளார். உங்களை ஒரு செய்தி வாசிப்பாளராக கருதிக் கொண்டு அதனை எழுதுக?

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

2. வானொலி அல்லது தொலைக்காட்சியில் கேட்ட, உங்களுக்கு விருப்பமான விளம்பரம் ஒன்றை எழுதுக?

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

3. நீர் பார்த்து பரவசம் அடைந்த கிரிக்கட் போட்டியின் முக்கிய காட்சியை விபரிக்க.

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

4. அதிகாலையில் வானொலிச் செய்தியை நீங்கள் செவிமடுத்துக் கொண்டு இருந்தபோது ஆண்டு 5 புலமைப்பரிசில் மாணவர்களின் பரீட்சை முடிவுகள் வெளிவந்து விட்டதாகவும். அநேக மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் எனவும் அறிந்து கொண்டீர்கள். இச்செய்தியை செவிமடுத்த நீங்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தாருங்கள்.

1. இச்செய்தி மாணவராகிய உங்களை மிகவும் ஊன்றிக் கவனிக்க செய்தது. அதற்கான காரணம் யாது?

   ..........................................................................................

2. இச்செய்தி உங்களுக்கு மிகவும் துணிச்சலை தந்துள்ளது. இதற்கான காரணம் யாது?

   ..........................................................................................

**எழுதுங்கள்**

உ ப் டிட் ட வ ரை உ ள் ள ள வு ம் நி னை

3 நீங்கள் எந்த வருடத்தில் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளீர்கள்?

.................................................................................................................

4. இச்செய்தி ஒலிபரப்பபட்ட நேரம் யாது?

.................................................................................................................

5. இச்செய்தியை மிகவும் உன்னிப்பாக அவதானித்த நீங்கள் இதைப் பற்றி பாடாசலையில் ஆசிரியருக்கு எவ்வாறு கூறினீர்கள்?

.................................................................................................................

## 3.2.2 மௌனமாக வாசித்தல்

### தற்புகழ்ச்சி

ஓர் ஊரில் விநாயகம் என்ற பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் தற்பெருமை கொண்டவன். அவனது முன்னோர்கள் சேர்த்து வைத்த சொத்தில் வசதியாக வாழ்பவன்.

விநாயகம் தனது தற்பெருமைக்காகவும், தற்புகழ்ச்சிக்காகவும் தினமும் பெரும் பணம் செலவு செய்வான். அவனைப் புகழ்வதற்காக எப்போதும் அவனைச் சுற்றி ஒரு கூட்டமே இருக்கும்.

ஒரு நாள் விநாயகம் தெருவில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்தான்.

அப்பொழுது ஏழ்மையான மனிதன் ஒருவன் எதிரில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்த விநாயகம் கை நீட்டி அவனை நிறுத்தினான்.

"யாரப்பா நீ? ஊருக்குப் புதுசா?" என்று கேட்டான் விநாயகம்.

"ஆமாம் ஐயா, வேலை தேடி பக்கத்து ஊரிலிருந்து வருகிறேன்." என்றான் அந்த மனிதன்.

"இதோ பார்! நான் தான் இந்த ஊரிலேயே பெரிய பணக்காரன். என்னிடம் இப்போது இரு நூறு ரூபாய் இருக்கிறது. என்னை ஒரு முறை ஏதாவது புகழ்ந்து பேசு, உனக்கு ஐம்பது ரூபாய் தருகிறேன்." என்றான் வினாயகம்.

அதைக் கேட்ட அந்த மனிதனுக்கு விநாயகத்தின் மனநிலையும் தற்பெருமையும் நன்றாகப் புரிந்தது. உடனே அவன்,

"ஐயா! தங்களைத் தாராளமாகப் புகழ்கிறேன். அதேசமயம் பணத்தை விட, புகழ்ச்சிச் சொல்லுக்கு மதிப்பு அதிகம் என்பதையும் தாங்கள் உணர வேண்டும் இத்தாங்க முதலில் பணத்தைக் கொடுங்கள்" என்றான்.

உடனே விநாயகம் ஐம்பது ரூபாயை எடுத்து அந்த மனிதனிடம் கொடுத்தான். அதைப் பெற்றுக் கொண்ட அம்மனிதன் ஐயா! நான் புகழப் போகும் புகழ்ச்சிச் சொற்களின் மதிப்பை விட இந்த ஐம்பது ரூபாயின் மதிப்பு மிகவும் குறைவாக உள்ளது. நல்ல தரமான புகழ்ச்சி

**எழுதுங்கள்**

உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு

வேண்டுமென்றால் நீங்கள் இன்னும் தர வேண்டியிருக்கும்! என்றான்.

“அப்படியா? இந்தா பிடி, இன்னுமொரு ஐம்பது!” என்று சொல்லி, மேலும் ஐம்பது ரூபாயை எடுத்து அந்த மனிதனிடம் கொடுத்தான் விநாயகம்.

“இரு நூறில் நூறை உனக்குக் கொடுத்து விட்டேன். கெதியாகப் புகழ்ந்து பேசு” என்றான் விநாயகம்.

அதைக்கேட்டு மெல்லப் புன்னகைத்த அந்த மனிதன்.

“என்ன ஐயா நீங்கள்! எதுவுமே புரியவில்லையே. உங்களிடம் நூறு ரூபாய் உள்ளது போல் இப்பொழுது என்னிடமும் நூறு ரூபாய் உள்ளது. பொருளாதார ரீதியில் இப்பொழுது நாம் இருவரும் சரிசமமானவர்கள். இப்படி சரிசமமாக உள்ளவர்கள். ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்வதில்லையே! என்றான்.

“ஓ, அது உண்மைதான். இதோ மீதமுள்ள நூறு ரூபாவையும் நீயே வைத்துக்கொள். இப்போது நீ என்னைப் புகழ எந்தத் தடையும் இருக்காது என்று நினைக்கிறேன்.” என்று சொன்ன விநாயகம் மீதியிருந்த நூறு ரூபாவையும் யோசிக்காமல் அவனிடம் கொடுத்தான்.

அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்ட அம்மனிதன், “இதோ பாருங்கள். இப்பொழுது நான் உங்களைப் புகழ்ந்து பேச வேண்டிய அவசியமே இல்லை. ஒன்றுமே இல்லாதவனை, இருக்கிறவன் எங்கேயாவது புகழ்வானா?” என்று கேட்டான்.

வெறும் புகழ்ச்சிக்காக பணத்தை இழந்ததோடு, பணம் இல்லாவிட்டால் சுற்றியிருக்கும் கூட்டமும்கூட விலகி விடும் என்று அப்போது தான் விநாயத்திற்கு உறைத்தது.

பெருமை, புகழ் என்பன செய்யக்கூடிய நற்காரியங்களுக்காகத் தேடி வர வேண்டும். அதை விலை கொடுத்து வாங்க முடியாது. இந்தாருங்கள் ஐயா உங்கள் பணம், என்று கூறி அவனது பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டுச் சென்றான் அந்த மனிதன், புகழ் என்ற போதையில் இருந்து முற்றிலும் விடுபட்டு, ஒரு புதிய மனிதனாக வீடு திரும்பினான் விநாயகம்.

## கற்றுக் கொள்

நன்மை செய்யக் கற்றுக் கொள்!
நலமாய் வாழக் கற்றுக் கொள்!
உண்மை பேசக் கற்றுக் கொள்!
உயர்வாய் வாழக் கற்றுக் கொள்!

துயரைப் போக்கக் கற்றுக் கொள்!
துணிந்து செயற்படக் கற்றுக் கொள்!
உழைத்து வாழக் கற்றுக் கொள்!
உலகை ஆளக் கற்றுக் கொள்!

இனிதாய் பேசக் கற்றுக் கொள்!
இன்பம் பயக்கக் கற்றுக் கொள்!
வறுமை வந்தால் வாழ்வினில்,
தாங்க ஏற்கக் கற்றுக் கொள்!

அன்பாய் வாழக் கற்றுக் கொள்!
பண்பாய்ப் பழகக் கற்றுக் கொள்!
அழியாக் கலையை வாழ்வினில்,
அறிந்து பயின்றிடக் கற்றுக் கொள்!

### 3.2.3 வாசித்தவற்றை விமர்சித்துக் கிரகித்தல்

மயூரி படம் வரைவதில் மிகவும் ஆர்வம் உள்ளவள். ஒரு நாள் அவளுடைய ஆசிரியர் படம் வரையும் போட்டியில் பங்கு பற்றுமாறு கூறினார். மயூரி தனது பாடசாலையின் சார்பில் தான் வரைதல் போட்டியில் பங்கு பற்றுவதை எண்ணி உளம் மகிழ்ந்தாள். இப்போட்டிக்காக மயூரி ஒவ்வொரு நாளும் வரைதலில் பயிற்சி பெற மூன்று மணி நேரம் செலவிட்டாள்.

கடைசியாக போட்டிக்கான தினமும் வந்தது. போட்டி இலங்கைத் தேசிய கலாபவனத்தில் நடைபெற்றது. அங்கு பல பாடசாலை மாணவ, மாணவிகள் பல்வேறு பாடசாலைச் சீருடைகளுடன் இருந்தனர். சிலர் மயூரியை நட்புடன் பார்த்தனர்.

போட்டி ஆரம்பமானது. மாணவர்கள் படம் வரைவதில் மும்முரமாக ஈடுபட்டனர் மயூரி கடற்கரைக் காட்சியினை சிறப்பாக வரைந்தாள். தனது படத்தை தீட்டி முடிந்தவுடன் மற்றும் போட்டியாளர் வரைந்த படங்களையும் பார்த்தாள்.

போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்ட போது, மயூரியின் படம் முதலாம் இடத்தை பெற்றுள்ளதாக அறிவித்தனர். மயூரி தனது கடின முயற்சியால் வெற்றி பெற்றதை எண்ணி அக மகிழ்ந்தாள்.

1. மயூரியின் ஆசிரியர் ஏன் வரைதற் போட்டியில் பங்குபெறுமாறு மயூரியை அழைத்தார்?
   1. மயூரி ஆசிரியரால் நேசிக்கப்பட்ட மாணவி.
   2. மயூரி விடா முயற்சி உடையவள்.
   3. மயூரி நன்றாக சித்திரம் தீட்டக் கூடியவள்.
   4. மயூரி போட்டியில் வெற்றி பெறுவாள் என்பது அவளுக்குத் தெரியும். (...............)

2. வரைதல் போட்டி எங்கு நடைபெற்றது?
   1. இலங்கை தேசிய கலாபவனத்தில்.
   2. விகாரமகாதேவி பூங்காவில்.
   3. பாடசாலை விளையாட்டு மைதானத்தில்.
   4. பூந்தோட்டத்தில். (.........................)

3. ஏன் பாடசாலை மாணவர்கள் வித்தியாசமான சீருடைகளுடன் இருந்தனர்?
   1. அவர்கள் கவர்ச்சியாக இருக்க வேண்டுமென்று விரும்பினர்.
   2. அவர்கள் வேறு வேறு பாடசாலைகளை சேர்ந்தவர்களாக இருந்தனர்.
   3. அவர்கள் வேறுபட்ட வகுப்புகளில் படித்தனர்.
   4. அவர்கள் வித்தியானமான வயதுடையவர்கள். (.........................)

4. மயூரி என்ன காட்சியை வரைந்தாள்?
   1. மலர்க் கண்காட்சி.
   2. வண்ணத்துப்பூச்சி
   3. அழகான பறவை.
   4. கடற்கரைக் காட்சி. (..........................)

5. மயூரி போட்டியல் வெற்றி பெற்றாள். ஏனெனில்.
   1. மூன்று மாதங்களுக்குப் பயிற்சி செய்தாள்.
   2. அவளை எல்லோரும் அன்புடன் நேசித்தனர்.
   3. மற்றவர்களின் படத்தை பார்த்து வரைந்தாள்.
   4. அவள் பாவித்த கலர்கள் வெளிநாட்டினது. (..........................)

**3.2.3 எளிதான கதைகள், கவிதைகளை மௌனமாக வாசித்து அவற்றின் சாரம்சத்தை சொந்த உரைநடையில் எழுதுதல்.**

## சட்டி குட்டி போடும் என்றால்

மத்திய ஆசியாவில் நஸ்ருதீன் முல்லா என்னும் விகடகவி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருடைய விகடப்பேச்சு எல்லோரையுஞ் சிரிக்கச் செய்ததோடு சிந்திக்கவும் செய்தது.

முல்லாவின் அயல்வீட்டுக்காரர் ஒருநாள் அவருடைய வீட்டுக்கு வந்தார். அவர் "எங்கள் வீட்டுக்கு விருந்தினர் வந்திருக்கின்றனர் உணவு சமைக்க உங்கள் சட்டிகளைத் தாருங்கள்" என்று கேட்டார். அவர் கேட்ட சட்டிகள் எல்லாவற்றையும் முல்லா கொடுத்தார்.

சில நாள்கள் கழிந்தன. அயல்வீட்டுக்காரர் முல்லாவிடம் வந்தார். அவர் தாம் எடுத்துச் சென்ற சட்டிகளுடன் ஒரு சிறிய சட்டியையுங் கொண்டு வந்திருந்தார். அப்பொழுது முல்லா அந்தச் சிறிய சட்டியை வியப்புடன் பார்த்தார். "இந்தச் சிறிய சட்டி என்னுடைய தன்று இதனை ஏன் கொண்டுவந்தீர்" என்று அவர் அயல்வீட்டுக்காரரைக் கேட்டார். "நீங்கள் தந்த சட்டிகள் போட்ட குட்டி இது. சட்டப்படி இது உங்களுக்கே உரியது" என்று அயல்வீட்டுக்காரர் வேடிக்கையாக கூறினார். முல்லா இயற்கையாகவே விகடமாகப் பேசுபவர். அவர் அயல்வீட்டுக்காரரின் விகடப் பேச்சைக் கேட்டுத் திணறி விடுவாரா?

சில நாள்கள் கழிந்த பின்னர் முல்லா அயல்வீட்டுக்காரரிடஞ் சென்றார். "எங்கள் வீட்டுக்கு விருந்தினர் வந்திருக்கின்றனர்ஹ உணவு சமைக்க உங்கள் சட்டிகளைத் தாருங்கள்" என்று அவர் கேட்டார். அயல்வீட்டுக்காரது முல்லா கேட்ட சட்டிகள் எல்லாவற்றையுங் கொடுத்தார். முல்லா அவற்றை எடுத்துக் கொண்டு தம் வீட்டுக்குச் சென்றார்.

பல நாள்களாகியும் முல்லா அச்சட்டிகளைத் திருப்பிக் கொடுக்கவில்லை. எனவே அயல்வீட்டுக்காரர் முல்லாவின் வீட்டுக்குச் சென்றார். முல்லா அவரைக் கண்டவுடன் "என்ன இன்று திடீரென வந்திருக்கிறீர்" என்ற கேட்டார். அப்பொழுது அயல்வீட்டுக்காரர் "ஒன்றுமில்லை நீங்கள் என்னிடம் எடுத்து வந்த சட்டிகளை இன்னமும் திருப்பி கொடுக்கவில்லை. அவற்றைத் திருப்பிக்கொண்டு செல்லவா வந்தீர்கள்? அவை இறந்து மூன்று நாள்கழிந்து விட்டனவே" என்று முல்லா பதிலளித்தார். "என்ன! சட்டிகளுமா இறக்கும்

என்று அயல்வீட்டுக்காரர் வியப்புடன் முல்லாவைக் கேட்டார். "சட்டி குட்டி போடும் என்றால் அவை இறப்பதில் என்ன அதிசயம்" என்று முல்லா விடை கூறினார். அப்பொழுது தான் அயல்வீடுக்காரர் தாம் முல்லாவுக்குச் செய்த குறும்பின் விளைவு இது என்பதனை உணர்ந்தார். அவர் வெட்கத்தினால் தலை குனிந்தார்.

## 3.3 சொற்களஞ்சிய விருத்திக்காக வாசித்தல்

### 3.3.1 பரிச்சயமான சொற்கள், அறிமுகமான சொற்கள், புதிய சொற்கள் ஆகியவற்றை அவதானித்தல்.

**பரிச்சயமான சொற்கள்**

கரையும், படிப்போம், மின்னல், நோய், சுத்தம், முயல், பூமாலை, நெருப்பு, மேளம், வேடன், பானை, கொக்கு, ஒட்டகம், கோழி, முட்டை, பழங்கள், தோட்டம், கன்று, மிளகாய், வெள்ளை. கறுப்பு, நீலம், வானம், காகம், கரும்பு, வானொலி, தொலைக்காட்சி, நாடகம், குருவி, கீரை, ஈட்டி, உலகம், உப்பு, நுளம்பு, ஊஞ்சல், மூக்கு, பூட்டு, கூடை

குளிப்போம், வணங்குவேன், கொக்கரிக்கும், பூஞ்சோலை, வழிப்போக்கன், இளைப்பாறினான், வற்றாதநதிகள், கராம்பு, பறங்கியர், வெள்ளைப்பிரம்பு, கடிக்காது, பழரசம், பழக்கலவை, குகை, உயிர்கள். பிரயாணம், அழுக்குகள், மாதங்கள், பண்ணை, கணனி, நிகழ்ச்சிகள், காற்று, அசுத்தம், பிராணிகள், அதிகாரிகள், அயலவர்கள்.

தபாலகம், காய்கனிகள், சோலை, திருக்குறள், அதிகாரங்கள், குறட்பாக்கள், தந்திரம், பளபளக்கிறது, பஞ்சம், எண்ணெய், கிளித்தட்டு, அணிகள், வீதிவிதிகள், தரிப்பிடம், நிகழ்வுகள், சாதனை, நள்ளிரவு, விடாமுயற்சி, கண்டுபிடிப்பு, முரசு, ஆரோக்கியம், மரக்குற்றி, பலூன்கள், கொண்டாட்டம், திரண்டது. பதியம், அறுவடை, மாரிகாலம், விதைப்பார்கள், மேற்பரப்பு, கதிர்கள், அரிவி வெட்டுதல், சூடு மிதித்தல்.

**புதிய சொற்கள்**

| | | |
|---|---|---|
| துருக்கி | குறிப்பெடுத்தல் | இரவல் |
| கொழுகொம்பு | வாட்டம் | உயிர்ச்சத்து |
| தாதுப்பொருட்கள் | சுதந்திரம் | தொழில்நுட்பம் |
| மலைத்தொடர் | சரணாலயம் | மலைச்சாரல் |
| தொங்குபாலம் | பட்டதாரி | மாநகர் |
| சவாரி | பணியாட்கள் | ஆங்கிலேயர் |
| ஈரலிப்பு | ஈரிலை | ஒலிம்பிக் |
| எதென்ஸ் | பிரஜைகள் | ஐரோப்பா |
| ஆசியா | ஆபிரிக்கா | அவுஸ்திரேலியா |
| அமெரிக்கா | கண்டங்கள் | பெல்ஜியம் |
| தங்கப்பதக்கம் | வெள்ளிப்பதக்கம் | வெண்கலப்பதக்கம் |
| போட்டியாளர்கள் | வீரர்கள் | வீராங்கனைகள் |
| அஞ்சல்தலை | விலாசம் | ஓவியங்கள் |
| கட்டளை | முதலுதவி | வீண்விரயம் |

## கணித சொற்கள்

காலம், மணித்தியாலம், கடிகாரங்கள், கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், அளத்தல், நீளம், எண்கோலங்கள், இணையுங்கள், கொடுக்கல்வாங்கல், வாய்ப்பாடு, வீதம், பகிர்தல், நிறை, இருபரிமாணம், முப்பரிமாணம், வடிவங்கள், வட்டம், சதுரம், செவ்வகம், மீட்டற்பயிற்சி, திசை, கொள்ளளவும் கனவளவும், லீற்றர், நியமக் குறியீடு, இடப் பெறுமானம், பின்னங்கள், வரைபு, சென்ரிமீற்றர், சமச்சீரும் வெளிசார் கோலங்களும், அட்டவணை, நியமஅலகு, நிறந் தீட்டுங்கள், பிரதி செய்யுங்கள், கிராம், கிலோகிராம், மில்லிலீற்றர், தாயக்கட்டை.

## சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

மரஞ்செடிகள், நாம் பயன்படுத்துபவை., உணவு, வித்துக்கள், பாதுகாப்பு, நீர், போக்குவரத்து, வீட்டுத்தோட்டம், வேலைகள், வளி, புவி, வான், நகரம், முதலுதவி, அபிவிருத்தி, அங்கத்தவர்கள், நாற்றுக்கள், பாத்திரம், மண்வெட்டி ஆணி, இலைகள், செங்கட்டி, கூட்டெரு, பொலித்தீன், பூஞ்சணம், பூச்சிகள், வினாகிரி, வேப்பிலை.

## 3.4 இரசித்தலுக்காக வாசித்தல்

### 3.4.1 பல்வகை பாடல்கள் செய்யுள்களை வாசித்தல்

ஏர் பிடித்து வயல் உழுதோம்
அந்தக்காலம்
எந்திரத்தால் வயல் உழுவோம்
இந்தக்காலம்

வண்டி கட்டி சென்று வந்தோம்
அந்தக்காலம்
அண்டவெளி சென்று வந்தோம்
இந்தக்காலம்

அம்புலியை வா வா என்றோம்
அந்தக்காலம்
அம்புலிக்குச் சென்று வந்தோம்
இந்தக்காலம்

– அம்பி –
நன்றி: கொஞ்சம் தமிழ்

**பூசிரிக்கிறது**

அண்ணன்:- அன்புத் தங்கையே – எந்தன்
ஆசைத் தங்கையே
இன்ப மணந் தரும் மலர்
சிரிக்கும் அழகைப் பார்!

தங்கை:- அன்பு அண்ணனே – எந்தன்
ஆசை அண்ணனே
இன்ப மலரெல்லாம் – ஒன்றாய்
இருக்கும் அழகைப் பார்!

எம். ஸீ. எம். ஸூபைர்
நன்றி:- எங்கள் தாய்நாடு

## எலியும் சேவலும்

**சேய்எலி**

வெய்யிற் கொடுமையம்மா! மேனி வேர்க்குதம்மா!
பைய உலாவி வரப் பிரிந்து விடை தாருமம்மா

பொல்லாத வெப்பமம்மா! புழுங்கி பவியுதம்மா
மெல்ல உலாவி வர விரும்பி விடை தாருமம்மா!

**தாய்எலி**

ஆசை மிகுந்த மைந்தா! அன்பான கண்மணியே!
மோசம் வரும் மகளே! முற்றத்திலும் போக வேண்டாம்

பொல்லாத துட்டர் மைந்தா! புறத்தே பதுங்கி நிற்பார்!
அல்லா தன புரிவார் ஐயா நீ போக வேண்டாம்.
..............................................................
..............................................................

நாவலியூர் சோமசுந்தரப்புலவர்
நன்றி:- சிறுவர் செந்தமிழ்

## 3.4.2 கதைகள் நாடகங்கள் போன்ற உரைப்பகுதிகளை வாசித்தல்

முற்காலத்திலே தமிழ்நாட்டிலே பெண்கள் பலர் பெரும் புலவர்களாக விளங்கினார்கள். அவர்களுள் ஔவையாரும் ஒருவர். ஒருமுறை ஔவையார் ஒரு வெளியிலே நடந்து சென்றார். நடந்து சென்ற களைப்பினால் ஒரு நாவல் மரத்தின் கீழ் அமர்ந்தார்.

மரத்தில் ஒரு சிறுவன் நாவற்பழங்களைப் பிடுங்கித் தின்று கொண்டிருந்தான். தனக்கும் பழங்கள் தரும்படி ஔவையார் கேட்டார். "சுடாத பழமா? சுட்ட பழமா? வேண்டும் எனச் சிறுவன் கேட்டான். சிறுவன் கூறியது ஔவை யாருக்கு விளங்கவில்லை. பழங்களிற் சுட சுட்ட பழம் சுடாத பழம் இருக்கிறதா என ஔவையார் கேட்டார். "ஆம் அவை இருக்கின்றன" எனச் சிறுவர் சொன்னான்.

"சுடாத பழம் தா" என ஔவையார் சொன்னார். அவன் காய்களைப் பிடுங்கிக் கீழே போட்டான். ஔவையார் அவைகளைத் தின்றார். பின்பு "சுட்ட பழம் தா" எனச் சொன்னார். உடனே சிறுவன் ஒரு கிளையை அசைத்தான். உடனே நன்கு பழுத்த பழங்கள் நிலத்தில் விழுந்தன. அவற்றில் மணல் படிந்திருந்ததால் அவைகளில் இருந்த மண்ணைப் போக்கும்படி

ஔவையார் வாயால் ஊதினார். அப்போது அந்தச் சிறுவன் “என்ன பாட்டி! பழம் நன்றாகச் சுடுகிறதா” என்று கேட்டான். சுடாத பழம் காய்ப்பழம் எனவும், சுட்ட பழம் நன்றாகப் பழுத்த பழம் எனவும் ஔவையார் அப்போது அறிந்து கொண்டார். சிறுவனின் திறமையைப் பாராட்டி வேறு இடம் சென்றார்.

## உரையாடல்

வரதன்:- சலீம் நான் கேட்கும் கேள்விக்கு விடை சொல்கிறாயா?

சலீம்:- கேள்வியைச் சொல்லு விடை தெரிந்தால் சொல்லுகிறேன்.

வரதன்:- மாம்பழத்தினுள் வண்டு எப்படி செல்கிறது?

சலீம்:- எனக்கு இந்தக் கேள்விக்கு விடை தெரியாது. அதோ மேரி வருகிறாள். அவளிடம் கேட்டுப் பார்ப்போம்.

வரதன்:- மேரி நான் கேட்கும் கேள்விக்கு விடை தெரிந்தால் சொல்கிறாயா?

மேரி:- கேள்வி என்ன என்று சொல்லு. தெரிந்தால் சொல்கிறேன்.

சலீம்:- மாம்பழத்தினுள் வண்டு எப்படி செல்கிறது? என்று வரதன் கேட்கிறாள்.


மேரி:- வரதன்! 'மாம்பழத்தினுள் வண்டு உட்புகுவது கிடையாது.. மாம்பூவிலேயே வண்டு முட்டை காணப்படும். மாம்பூ காயாகி, கனியாக மாறும் அந்த பூவிலுள்ள முட்டை வாழ்க்கைச் சுழற்சியை முடித்துக் கொண்டு பழத்திற்குள்ளேயே சிறிய வண்டாக மாறிவிடும்.

சலீம்:- அப்படியா!

வரதன்:- எனது கேள்விக்கு இதுவரை எவருமே பதில் சொல்லவில்லை. நன்றி மேரி.

மேரி:- எனக்கு நேரமாகிறது. நான் போய் வருகிறேன்.




இதில் எனக்கு என்ன ஆனாந்தம்! தங்களிடமே இருந்து விடுகிறேன்!
என்ன சொல்கிறாய்?
அரசே! ஒவ்வொரு வருஷமும் தங்கள் பிறந்த நாளன்று எங்களை விலைக்கு வாங்குகிறீர்கள்!
கிளி மனம் வருந்த நியாயத்தை கூறியது!
அதற்காக ஊரில் உள்ளவர்கள் எங்களை பிடித்து மீண்டும் வருஷம் முழுவதும் கூண்டில் அடைத்து விடுகிறார்கள்!
இப்படி செய்வதால் எங்களில் சிலர் கூண்டிலேயே இறந்து விடுகிறார்கள்!
இதனால் உங்கள் கருணையைவிட எங்களுக்கு கொடுமை தான் அதிகம்!
உண்மைதான்! கிளி சொல்வதில் நியாயம் இருக்கிறது!
இதை கேட்ட அரசர் நியாயத்தை உணர்ந்தார்.
இன்று முதல் உங்களை பிடிப்பவர்களுக்கு தண்டனை கொடுப்பேன்!
உடனே அரசர் கிளிக்கு ஆறுதல் கூறினார்.




## 3.5 கற்றலுக்காக வாசித்தல்

### 3.5.1 பாடநூல்கள், துணை நூல்களை வாசித்தல்

#### மூட்டாள் குரங்கு

ஒரு காட்டில் பல குரங்குகள் கூட்டமாக வசித்து வந்தன.

குளிர் காலத்தில் ஒரு நாள் மிகவும் கடுமையான குளிராக இருந்தது. குரங்குகளால் குளிரைத் தாங்க முடிய வில்லை.

கொஞ்சம் நெருப்பு கிடைத்தால் சருகுகளைப் போட்டு தீ மூட்டி குளிர் காயலாம் என்று ஒரு கிழக்குரங்கு கூறிற்று.

நெருப்புக்கு எங்கே போவது என்று குரங்குகள் யோசித்துக் கொண்டிருந்த போது ஒரு மின்மினிப் பூச்சி பளிச் பளிச் சென்று மின்னியவாறு பறந்து சென்று கொண்டிருந்தது.

அதைக் கண்ட ஒரு குரங்கு “அதோ நெருப்பு போகிறது” என்று கூறிற்று.

மற்றொரு குரங்கு அந்த மின்மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தரையில் போட்டது.

மற்ற குரங்கள் சுற்றிலும் கிடந்த குப்பை கூளங்களைச் சேகரித்து வந்து மின்மினிப் பூச்சி மீது போட்டன

பிறகு குரங்குகள் நெருப்பு கொழுந்து விட்ட எரியப் போகிறது என எதிர்பார்த்து சூழ்ந்து அமர்ந்து கொண்டன.

ஆனால் தீ எரியும் வழியைக் காணோம்.

பிறகு குரங்குகள் வாயினால் குப்பையை ஊதி நெருப்பை எரிய விடும் முயற்சியில் ஈடுபட்டன.

மரத்தில் அமர்ந்து குரங்குகளின் கோமாளிக் கூத்தைக் கவனித்துக் கொண்டிருந்த சுசிமுகி என்ற ஒரு பறவை கலகலவென சிரித்தவாறு மரத்தை விட்டிறங்கிக் கீழே வந்து அமர்ந்தது.

பிறகு குரங்களை நோக்கி, "நண்பர்களே! மின்மினிப்பூச்சியை நெருப்பு என்று எண்ணிக் கொண்டு தீ மூட்ட வீண் முயற்சி எடுக்கிறீர்கள். என்னதான் வாயால் ஊதினாலும் மின்மினிப் பூச்சியிடமிருந்து நெருப்பு வரவே வராது. வீண் வேலையே விடுங்கள்" என்று புத்திமதி கூறிற்று.

"உனக்கு ஒன்றும் தெரியாது. வாயை மூடிக் கொண்டு உன் வேலையைப் பார்" என்று கூறிவிட்டு குரங்குகள் மறுபடியும் குப்பையை ஊதி தீ மூட்ட முயற்சி செய்தன.

பறவை குரங்குளின் முட்டாள் தனத்தை எண்ணித் திரும்பத் திரும்ப புத்திமதி கூறிக் கொண்டிருந்தது.

இதனால் கோபமுற்ற குரங்குகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சுசிமுகி பறவை மீது பாய்ந்து அதனைப் பிடித்துத் தரையில் அடித்துக் கொன்று விட்டன.

## <u>தமையனும் தம்பியும்</u>

பரதன் தூரத்தே இராமரைக் கண்டான். கைகளை உச்சியிற் கூப்பி வணங்கினான். இராமரின் பக்கத்தில் வந்து அண்ணா! "அண்ணா" என்று அழுதான். இராமரும் அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு வருந்தினார். இலக்குமணனும் மனம் சோர்ந்து நின்றான்.

பின்பு, தகப்பன் இறந்த செய்தியைப் பரதன் சொன்னான். அதைக் கேட்டதும் இராமரும் சீதையும் இலக்குமணனும் தரையில் விழுந்து அழுதனர். தாய்மாரும் மந்திரிமாரும் குருவும் அவர்களைத் தேற்றினர். இராமர் தகப்பனுக்குச் செய்யவேண்டிய இறுதிக் கடன்களைச் செய்து முடித்தார்.

அதன்பின் இராமரும் பரதனும் அரசாட்சியை யார் ஏற்றுக்கொள்வது என்பதைப் பற்றிச் சம்பாஷித்தார்கள்.

**இராமர்:** தம்பி! தந்தையோ இறந்துவிட்டார். இப்போது அயோத்தியில் உள்ளவர்கள் அரசன் இல்லாது துக்கப்படுகின்றனர். தகப்பனார் உனக்கே அரசுரிமையைக் கொடுத்துவிட்டார். ஆதலால் நீ போய், நீதி தவறாது ஆட்சி செய்.

**பரதன்:** அண்ணா! எனக்குத் தகப்பனும் நீரே! கடவுளும் நீரே! உங்களுடைய அரசை நான் ஒருக்காலும் ஏற்கமாட்டேன். தகப்பன் எனக்கு அரசைத் தந்தாலும் அதை உமக்குத் தருகின்றேன். வந்து அரசாட்சி செய்யும்படி வேண்டுகின்றேன்.

**இராமர்:** பரதா! என்னிடத்தில் உனக்கு அன்பு உண்டு என்று எனக்குத் தெரியும். என்றாலும் தந்தையின் கட்டளையை மைந்தர் மீறுதல் கூடாது. தகப்பனாரின் சொற்படி பதினான்கு வருடமும் முடிந்த பின்பே நான் அயோத்திக்குத் திரும்புவேன்.


**பரதன்:** அண்ணா! நீங்கள் வருவதற்கு மறுத்தால் நானும் உங்களுடன் இங்கேதான் இருப்பேன்.

இருவரும் பேசியதை மந்திரிமாரும் குருவும் கவனமாகக் கேட்டனர். அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சிறிது நேரம் யோசித்துக் கொண்டே இருந்தனர்.

## பொது அறிவு விருத்தியும் ~ தகவல் சேகரிப்பு

### உலக அதிசயங்கள்

தாஜ்மஹால், சீனச்சுவர் போன்ற சமகாலத்து அதிசயங்களைவிட பழைய காலத்து அதிசயங்கள் மொத்தம் ஏழில் மிச்சமிருக்கும் ஒரேயொரு அதிசயம் சியாப்ஸ் மன்னனின் பிரமிட்டு எகிப்தில் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு கட்டியது.



இரண்டாவது அதிசயம் பாபிலோன் சுவர்கள். அதன் மீது தொங்கும் தோட்டம்....! கி.. மு 600ல் கட்டிய உயர செங்கல் சுவர் இன்று குப்பையாகக் கிடக்கின்றது.

## கண்டு பிடிப்புக்களும் கண்டு பிடித்தோரும்

| | | |
|---|---|---|
| 1. | அச்சியந்திரம் | யோன் கற்றன் பேர்ச் |
| 2. | முதலில் அச்சடிக்கும் முறை | சீனர் |
| 3. | வெடிமருந்து | சீனர் |
| 4. | திசையறிகருவி | சீனர் |
| 5. | தபால் தலைப்புகள் | சேர். றொல்ண்டீல் |
| 6. | மடக்கை வாய்ப்பாடு | சேர். சார்ல்ஸ்நப்பியர் |
| 7. | மின்குமிழ் | லாங்மயூர் |
| 8. | உருக்குகதிர் | றோன்ற்ஜேன் (1985) |
| 9. | புகைப்படக் கருவி | எல். மாகுரே |
| 10. | டீசல் இயந்திரம் | டீசல் |

| | | |
|---|---|---|
| 11. | தொலைக்காட்சி | ஜோன்றோஜி பெயல்ட் |
| 12. | பெற்றோல் இயந்திரம் | டெயிம்மன் |
| 13. | ஊற்றுப்பேனா | ஊவாற்றமன் |
| 14. | டாக்டர் கேட்கும் கருவி | லெநெக் |
| 15. | முதற் புகையிரத இயந்திரம் | ஜோர்ஜ் ஸ்ரீபன்சன் |
| 16. | டைனமோ | மைக்கல் பரடே |
| 17. | மைனமற் | அல்பிரட் நோபல் |
| 18. | இரும்பின் உபயோகம் | சிறிறைற்ஸ் |
| 19. | தொலைபேசி | அலெச்சசான்டர் கிரகம் பெல் |
| 20. | கம்பியில்லாத் தந்தி (பயலஸ்) | மார்க்கோனி |
| 21. | தூரதாண்டக் கண்ணாடி | கலிலியோ |
| 22. | இரும்பை உருக்கி உருக்கு இரும்பாக்கும் முறையை கண்டுபிடித்தவர். | பெஸ்மர் |
| 23. | துவிச்சக்கர வண்டி | கோர்க் பற்றிக் மக்மில்லன் |
| 24. | குருதிச்சுற்றோட்டம் | வில்லியம் கார்வே |
| 25. | பாலர்களுக்குக் கல்வியூட்டும் முறை | கலாநிதி மொன்சோரியம்மை |
| 26. | ஆரம்பப் பள்ளிச் சிறுவர்களின் கல்வி முறை | புறோபெல் |
| 27. | இன்சுலின் | சேர். எல். பான்சிங் |
| 28. | கிழக்கேவரும் கப்பல்பாதை | வாஸ்கொடகாமா |
| 29. | பிராணவாயு | பிறிஸ்லி |
| 30. | மயக்கமருந்து | செர் ஜேம்ஸ்சம்சன் |
| 31. | மேர்கரிஷ்ணமானி | பரநீற் |
| 32. | நவீன சத்திரசிகிச்சை முறை | லிஸ்ரர் பிரபு |
| 33. | அம்மைநோய் தடைப்பல் | எட்வேட் ஜேனர் |
| 34. | சிறுபிள்ளைவாத நோய் மருந்து | சோக் |
| 35. | விசர்நாய்கடி மருந்து | லூயிபாஸ்டர் |
| 36. | பிலெயின் எழுத்துமுறை | லூயிப்பெயில் |
| 37. | தட்டச்சு இயந்திரம் | ஷோல்ஸ் |
| 38. | தையல் மெசின் | எலியாஸ்கோவ் |
| 39. | அமெரிக்காவை கண்டுபிடித்தமை | கிறிஸ்தோபர் கொலம்பஸ் |
| 40. | பூமியை வலம் வரும் சக்தி | சேர் ஐசாக் நியூட்டன் |
| 41. | ரேடியம் | கியூரி அம்மையார் |
| 42. | இரிடியம் | டெஸ்கொற்றிலும், ரெனற் என்பவரும் |
| 43. | தாவரங்களுக்கு உயிர் உண்டு என்று நிரூபித்தவர் | சேர். ஜே. சி. போஸ் |
| 44. | இருதயமாற்று சத்திரசிக்சிசை | கலாநிதி கிறிஸ்ரி பெனாட் |
| 45. | நவீன முறையில் பெருஞ்சாலைகள் அமைத்தமை | உரோமர் |
| 46. | ஒலிம்பிக் விளையாட்டுகள் | கிரேக்கர் |

**எழுதுங்கள்**

உ லகம் போற்ற வாழ்

| | | |
|---|---|---|
| 47. | வருடத்தை 365 நாட்களாகப் பிரித்தமை | உரோமர் |
| 4. | பட்ட நூற்றல் நெய்தல் | கிரேக்கர் |
| 49. | சனநாயக (குடியரசு) | சீனர் |
| 50. | "பிஜி" தீவுகளை கண்டுபிடித்தவர் | அதென்ஸ்நகர – இராச்சியம் |
| 51. | பசுபிக் சமுத்திரத்தில் முதல் முதல் பிரவேசித்த ஐரோப்பியர் | போர்டினன்ட் மகெலன் |
| 52. | தேயிலையின் உபயோகத்தை முதலில் மேற்கொண்டவர் | சீனா |
| 53. | நாணயத்தின் உபயோகத்தை முதலில் கண்டுபிடித்தவர் | பாரசீகர் |

## 3.6 வாசித்தலுக்காக வாசித்தல்

### 3.6.1 பத்திரிகையில் வெளிவந்தவற்றை வாசித்தல்

**இறப்பர் பிறந்த கதை**

அமெரிக்காவின் பழங்குடிமக்கள் பதினொராம் நூற்றாண்டிலேயே இறப்பரை அறிந்திருந்திருக்கிறார்கள். பதினொராம், பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இறப்பர் பொருட்கள் இன்றைய புதைபொருள் ஆய்வாளர்களுக்கு மிகவும் முக்கிய சான்றாக விளங்குகின்றன.

அமெரிக்க மக்களிடமிருந்தே ஐரோப்பிய மக்கள் இறப்பரைப் பற்றித் தெரிந்து கொண்டனர். ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தொராம் ஆண்டில் சார்ள்ஸ் குட் இயர் என்ற அமெரிக்கர் இறப்பரை அன்றாட உபயோகத்துக்குப் பயன்படுத்துவது பற்றிச் சிந்தித்தார். அவரது நோக்கம் இலேசான வெப்பம் இறப்பரைத் தாக்கினாலும் இறப்பர் உருகி விடுவதைத் தடுத்து அது கெட்டித்தன்மையை இழக்காமல் இருக்கச் செய்ய முடியுமா என்பதைக் கண்டறிவதுதான். தனது முயற்சியில் அவர் வெற்றியும் பெற்றார்.

நன்றி:- சிறுவர் விருந்து

**நன்றி**

வசந்தம் வந்தது
ஆற்றங்கரையிலிருந்த ஆலமரம் துளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்துக் கனிந்தது.

பறவையினங்கள் அனைத்தும் கா. கூ. கீ என்று குரல் கொடுத்துக் கொண்டே வந்து அதில் குடியேறின. பசியாறி உண்டு, களித்து, உறங்கி விழித்தன.

வசந்தம் சென்றது.
ஆலமரத்தில் துளிர் இல்லை. பூஇல்லை, காய் இல்லை, கனியும் இல்லை.

பறவைகள் பசிக்கு இரை தேடிப் பறந்தன. அருகிலிருந்த அரசமரம் "என்ன நன்றி கெட்ட பறவைகள்! எல்லாம் இருக்கும் வரைதான் அவற்றின் உறவு போலும்?" என்றது ஆலமரத்திடம்.

ஆலமரம் சிரித்தது. "ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டது அரசமரம்.
ஆலமரம் சொல்லிற்று.

"உனக்கும் எனக்கும் உள்ள இடத்திலேயே உணவு கிடைப்பது போல அவற்றுக்கும் கிடைத்தால். அவையும் நன்றியுள்ள ஜீவன்களாகத்தான் இருக்கும்!"

## 3.6.2 துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள், சுவரொட்டிகளைவாசித்தல்

### அழைப்பிதழ்

**நாவற்குழியூர் நடராஜன் நினைவுக் கவிதைப் போட்டி பரிசளிப்பு விழா**

திரு/திருமதி/செல்வி .........................................................................................

அண்புடையீர்,

"பிறைட் புக் சென்டர்" (பிறைவேட்) லிமிடட் நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் தேசிய சேவை. அமரர் நாவற்குழியூர் நடராஜன் நினைவாக நடத்திய கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும்.

**2.6.2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு**
**வெள்ளவத்தை 57ம் ஒழுங்கை தமிழ்ச்சங்க மண்டபத்தில்**
**நடைபெறவுள்ளது. இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை**
**அன்புடன் அழைக்கின்றோம்.**

**நன்றி.**

திரு. பொன் சக்திவேல்
பிறைட் புக் சென்டர் (பிறைவேட்) லிமிடெட்
எஸ். 27, முதலாம் மாடி,
கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி,
கொழும்பு 11.

பணிப்பாளர்
தமிழ் தேசிய சேவை,
இ. ஒ. கூ தாபனம்
கொழும்பு 7.

எண்ணம் போல
வண்ண நகைகளை
மங்கையர் மனங்குளிர
செய்திட என்றுமே
நாடுவீர்
சுசீலா நகை மாளிகை
177/9 செட்டியார் தெரு.
கொழும்பு - 11.
தொ. பே. 439090

**வகுப்பு**

25 வகையான சிகையலங்காரம். இயற்கை முறையிலான Facial சுய அலங்கார வகுப்புக்கள் ஆரம்பம் 07~08~2002 காலை 10~00 மணி, அருள் கல்வி வட்டம்.

**111, பொனடஜீன் வீதி**
**கொட்டாஞ்சேனை.**
**தொ. பே 331495**

**ஜோதிடம்**

அம்மன் அருள்வாக்குப் பெற்ற கைரேகை, நிபுணர் R.N. ராஜா மீண்டும் வருகை தந்துள்ளார். திரகாஷ மஹிஷ அஷ்டபந்தன வாயிலாக நிவர்த்திகள் செய்யப்படும். R.N. ராஜா மிலாகிரிய அவனியூ, பம்பலப்பிட்டி, போன்: 585237

**ஜோதிடம்**

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் 25 வருடம் ஈனபவம் பெற்ற ஜோதிடர் திரு. விஜயகுமார் மீண்டும் வருகை தந்துள்ளார். சந்திக்க வேண்டிய முகவரி

**இல, 67 பாங்க்சால் வீதி**
**கொழும்பு - 11**
**தொ. பே: 071-31016**

பயிற்சி

**மேற்கண்ட விளம்பரங்கள். அழைப்பிதழ் ஆகியவற்றை கிரகித்தல் கீழ்க்கானும் வினாக்கட்கு விடை தருக.**

1. மங்கையர் மனங் குளிர எங்கு நகை செய்ய வேண்டும்?
.................................................................................................

2. மணப்பெண் அலங்கார வகுப்பு எங்கு நடைபெறுகின்றது?
.................................................................................................

3. கைரேகை நிபுணரின் பெயர் என்ன?
.................................................................................................


4. 25 வருட அனுபவம் வாய்ந்த ஜோதிடர் யார்?
.................................................................................................

5. யார் நினைவாக கவிதைப் போட்டி நடைபெற்றது?
.................................................................................................

6. தமிழ்ச்சங்கம் எங்கு உள்ளது?
.................................................................................................

7. யாருடைய அனுசரணையுடன் கவிதைப்போட்டி நடைபெற்றது?
.................................................................................................

**பாடல்கள், கவிதைகள் வாசித்தல்**



**துண்டுப்பிரசுரம்**

தம்பி தங்கையரே
கிணற்றில் அல்லது ஆற்றில்
இருந்து கொண்டு வந்த
நீரை எப்போதும் கொதிக்க
வைத்து ஆறிய பின்
பருகுவோம்.

– நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சு –

**எழுதுங்கள்**

உயிர் கொடுப்பான் தோழன்

**விளம்பரம்**

**சவர்க்காரம் பற்றிய விளம்பரம்**

உங்கள் பிள்ளைகள் பாடசாலை செல்கிறார்களா
அவர்களுடைய ஆடைகள் தூய்மையாக
இருக்க வேண்டும்தானே!
தூய்மையான வெண்மைக்கு
உங்களுக்கு உதவுவது
சூரியன் சவர்க்காரம்
அதில் கலந்துள்ள எலுமிச்சஞ்சாறு
துணிகளை பளிச்சிடும்
வெண்மையாக்குகின்றது
இன்றே சூரியன் சவர்க்காரத்தை வாங்குங்கள்.

**அழைப்பிதழ்**

**பிறந்தநாள் அழைப்பிதழ்**

அன்புடையீர்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 21.05.2001 ஆந் திகதி அன்று பிற்பகல் 5 மணிக்கு எனது பிறந்த நாள் கொண்டாட்டம் நிகழவிருப்பதால் அத்தருணம் வருகை தந்தது விருந்துபசாரத்தில் பங்குபற்றுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

இவ்வண்ணம்,
கு. குடிணன்.

**எழுதுங்கள்**

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்

# 4.0 எழுதுதல்

## 4.1 எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுதல்

### 4.1.1 தமிழ் எழுத்துக்களின் அமைப்பு, அளவு, திசைமுகம் என்பவற்றை அனுசரித்து எழுதுதல்.

எழுத்து என்பது எழுதப்பட்டது, அல்லது சித்திரமாக வரையப்பட்டது என்று பொருள்படும். தமிழ் எழுத்துக்களை உயிரெழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், உயிர்மெய் எழுத்துக்கள், ஆய்தவெழுத்து என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

உயிரெழுத்துக்கள் – அ, ஆ, இ, ஈ, உ, ஊ. எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்ற பன்னிரண்டு எழுத்துக்களாகும்.

மெய்யெழுத்துக்கள் – க், ங், ச், ஞ், ட், ண், த், ற், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், என்ற பதினெட்டு எழுத்துக்களாகும்.

உயிர்மெய்யெழுத்துக்கள் – க, கா, கி, கீ முதலிய 216 ஆகும்.

ஆய்த எழுத்து – ஃ என்ற ஒன்றாகும்.

இவ்வெழுத்துக்களை நாம் சரியான அளவில் ஒழுங்காக எழுதப் பழக வேண்டும். எழுத்துக்களின் அமைப்பு ஒழுங்காக இருக்க வேண்டும். எழுத்து எழுதப்படும் திசையும் ஒரே மாதிரியாகவே இருக்க வேண்டும். இவற்றை மாணவர்கள் சிறுவயதிலிருந்தே எழுத்துப் பயிற்சிகள் மூலம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக :- 'அ' என்ற எழுத்தை என்று எழுதக் கூடாது. ஒரே அளவினதாக அமையுமாறு அ என்று எழுத வேண்டும்.
அ, ஆ, இ, என்றவாறு ஒரே சீராக எழுத்துக்களை எழுத வேண்டும்
எழுத்துக்களின் திசைமுகம் மேற்கிலிருந்து கிழக்காக அமையுமாறு எழுத வேண்டும்.

உதாரணமாக:- அ, ஆ, இ என்பதை என்று எழுதுதல் கூடாது அளவு, அமைப்பு, திசைமுகம் போன்றவற்றை அனுசரித்து எழுத வேண்டும்.

### 4.1.2 எழுத்துச் சொல், வாக்கியம், பந்தி என்பவற்றை ஏற்ற இடைவெளியில் எழுதுக.

எழுத்துக்களை அதன் உறுப்புக்கள் அழியாத முறையில் அழகாக எழுதப் பழக வேண்டும்.

உதாரணமாக "அ" என்றதை என்றுஅரையும் குறையுமாக எழுதக்கூடாது. "உ" என்றதை என எழுதக்கூடாது. மாணவர்களே. பின்வரும் கோடுகளில் அடங்கக் கூடியவாறு எழுத்துக்களை உறுப்பமைய எழுதுங்கள்.

1. நாங்கள் பாடம் படிப்போம்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

உ. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

3. ஔவையார் ஒரு சிறந்த புலவர்

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

## 4.1.3 தெளிவு, புனிதம்

மாணவர்கள் எழுதும் போது தெளிவாகவும் புனிதமாகவும் எழுத வேண்டும். அன்புள்ள என்ற சொல்லை என எழுதினால் பலர் விளங்கிக் கொள்ள மாட்டார்கள்.

அதேபோல எழுத்துக்கு மேல் எழுத்தாக அதாவது எழுத்தின் மீது இரண்டு, மூன்று முறை திரும்பத் திரும்ப எழுதி அசுத்தப் படுத்தக்கூடாது. எழுத்துக்களை ஒரே தடவையில் அளவாக அமைப்பாக, உறுப்பாக, அழகாக, தெளிவாக, புனிதமாக எழுத வேண்டும். இதற்காக பின்வரும் பயிற்சிகள் சிலவற்றை செய்யுங்கள்.

அ

க

அம்மா

இப்படிக்கு

ஔவையார்

உண்மை

ஐந்து

**எழுதுங்கள்**

எய்தவனிருக்க அம்பை ஏன் நோவான்

எண்பது

ஏற்றம்

கோழி

**எழுத்து, சொல், வாக்கியம், பந்தி என்பவற்றுக்கு சீரான இடைவெளி விட்டு எழுதுதல்.**

நாம் ஏதாவது ஒருவிடயத்தை எழுதும் போது ஒவ்வொரு எழுத்திற்குமிடையே ஒரே சீரான இடைவெளி விட்டு எழுத வேண்டும். இவ்வாறு எழுத்துக்களுக்கிடையே இடைவெளி விட்டு எழுதுவதால் நாம் எழுதும் விடயத்தைப் படிப்பவர்கள் விரைவில் உணர்ந்து கொள்ளக்கூடியதாயிருக்கும். இவ்வாறே ஒவ்வொரு சொல்லுக்கும், வாக்கியத்திற்கும் பந்திக்குமிடையே சீரான இடைவெளி விடுதல் அவசியமாகும்.

**கீழ்க்காணும் வசனங்களை உறுப்பாக கோட்டில் எழுதவும்.**

1. கர்ணன் துரியோதனனின் உற்ற நண்பனாக இருந்தான்.

2. அயல் வீட்டாருடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

3. பாடசாலையில் மாணவர்கள் பாடம் படிக்கிறார்கள்.

4. அம்மா பனை ஓலையால் பெட்டி இழைத்தாள்.

## 4.1.4 உயிர்க்குறி, நிறுத்தற் குறியீடுகளை அனுசரித்து எழுதுதல்

**சீரான உயிர்க் குறிகள்**

கா, கி, கீ, கு, கூ, கை, கெ, கே, கொ, கோ, கௌ

சில எழுத்துக்களுடன் சில உயிர்க் குறிகளை சேர்ப்பதால் வேறு சில எழுத்துக்கள் பெறப்படுகின்றன.

ா, ே, ெ, ை, ள. ി, ° ஆகியன உயிர்க்குறிகளாகும்.

உதாரணமாக ‘க’ என்ற எழுத்தோடு ‘ா’ (அரவைச்) சேர்ப்பதன் மூலம் ‘கா’ என்ற எழுத்தைப் பெறுகிறோம்

**வேறுபடும் உயிர்க்குறிகள்**

‘கா’ என்ற எழுத்தை க – ா – என்று பிரிக்க முடியும். ஆனால் சில எழுத்துக்களோடு உயிர்க்குறிகளை பிரிக்க முடியாது. உதாரணமாக.

கு, கூ, சு, சூ, டு, டூ, து, தூ, டி, டீ

**4.1.5 உயிர்க்குறிகளுக்கும் குறில், நெடில் ஓசைக்களுக்கமான தொடர்புகளை இனங்காணல்.**

அ, இ, உ, எ, ஒ எனும் உயிரெழுத்துக்கள் ஐந்தும் குற்றெழுத்துக்களாகும். இவற்றை குறில் எனவும் கூறலாம். குற்றெழுத்துக்களுக்கு மாத்திரை ஒன்றாகும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனும் ஏழு உயிரெழுத்துக்களும் நெட்டெழுத்துக்களாகும். இதனை நெடில் எனவும் கூறலாம். நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டாகும். மாத்திரை என்பது கண் இமைப்பொழுது அல்லது கைநொடிப்பொழுது ஆகும்.

உயிர்க்குறிகளுக்கும், குறில் நெடில் ஓசைகளுக்குமான தொடர்புகளை இனங்காணல்

| குறில் | நெடில் |
|---|---|
| அடி | ஆடி |
| இடி | ஈட்டி |
| உறி | ஊசி |
| எறி | ஏறி |
| ஒடி | ஓடி |

பயிற்சி

**உச்சரித்து வாசியுங்கள்.**

1. கன்னன் பந்தை அடித்தான்.
   மாலதி நடனம் ஆடினாள்.

உ. இன்று பட்டீர் என இடி முழங்கியது
   வேடன் ஈட்டியால் எறிந்தான்.

3. உறியில் பானை தொங்குகிறது.
   ஊரி கடற்கரையில் காணப்படும்.

4. அஸ்மின் பந்தை எறிந்தான்.
   அமீன் படிகளில் ஏறினான்.

5. ராஜி ஒடியல் கூழ் குடித்தாள்.
   ஷஜா வேகமாக ஓடினான்.

**எழுதுங்கள்**

எண்ணெழுத்து இகழேல்

## 4.2 நாளாந்த தேவைகளுக்காக எழுதுதல்

### 4.2.1 சொந்த விபரங்களைத் திருத்தமாக எழுதுதல்

**மாணவரது சுயவிபரப்படிவம்**

1. மாணவரது முழுப்பெயர்:-........................................................................................
2. முதல் எழுத்துக்களுடன் பெயர்:-..............................................................................
3. பால்:- ............................................ 4. சமயம்:- ..................................................
5. பிறந்த திகதி:-.................................. 6. பிறந்த இடம்:-............................................
7. சொந்த முகவரி:-.....................................................................................................

   .........................................................................................................................
8. தொலைபேசி இலக்கம்:-..........................................................................................
9. கல்வி கற்கும் தரம்:-...............................................................................................
10. கல்வி கற்கும் பாடசாலை:-.....................................................................................
11. தந்தையார் பெயர்:-.................................................................................................
12. தாயார் பெயர்:-......................................................................................................
13. தந்தையார் தொழில்:-..............................................................................................
14. தாயாரது தொழில:-.................................................................................................
15. சகோதர சகோதரிகளின் விபரம்:-...........................................................................

மேலே தரப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


.............................................

*மாணவரது கையொப்பம்*


**எழுதுங்கள்**

ஏழை சொல் அம்பலம் ஏறாது

## 4.2.2 கடிதம், கால அட்டவணை, குறிப்புகள் எழுத்துகள்





<u>கடிதத்தின் வடிவமைப்பு</u>

............................ ← முகவரியும்
............................
............................
............................ ← திகதியும்

விளிப்பு ← ............................
............................

..............................................................................................
..............................................................................................
உடல ← ..............................................................................................
..............................................................................................
..............................................................................................

............................ ← முடிப்பு
............................
............................← ஒப்பம்

எழுதுங்கள்

ஒன்றே குலம் ஒருவனே தேவன்

## 4.2.3 தந்திப்படிவம்

ශ්‍රී ලංකා ටෙලිකොම් ලිමිටඩ්

SRI LANKA TELECOM LIMITED

SLT/046

This form is for Inland and Indian telegram only

Stamp to be affixed by the sender overleaf

Attach this receipt when making a complaint.

Sri Lanka Telecom

விதுලි පණිවුඩ ලදුපත / Receipt for Telegram

No | Date | Amount Rs. c/C

SRI LANKA TELEGRAPHS

Signature of accepting officer

Sent at: H. M. To By:

| Class | Time | Office of Origin | Date | Service Instructions | Words | Amount Rs. c/C |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

Nothing to be written by the sender above this line

Instructions such as "Reply paid" "Urgent" "State" to be written here.

To : Name ............................................

Address ............................................

N.B. (i) The Name and address of the sender if to be Telegraphed should be written above this line.

(ii) The sender's signature name and address should be furnished overleaf.

මෙරට සාමාන්‍ය මුදල් ඇණවුම් ඉල්ලුම් පත්‍රය

உள்நாட்டுச் சாதாரண காசுக்கட்டளை விண்ணப்பம்

APPLICATION FOR INLAND ORDINARY MONEY ORDER

මුදල / தொகை / AMOUNT — රු. / ரூ. / Rs. ....... ශ. / ச. / c. ....... අංකය / இல. / No. .......

රුපියල් (අකුරෙන්) / ரூபா (சொல்லில்) / Rupees (in Words) ............................

ගෙවිය යුතු කාර්යාලය / பணம் கொடுபட வேண்டிய இடம் / Payable at ............................

ලබන්නාගේ නම (මුලකුරු සමඟ) / பெறுபவரின் பெயர் (முதல் எழுத்துகளுடன்) / Name of Recipient (with initials) ............................

යවන්නාගේ නම (මුලකුරු සමඟ) / அனுப்புபவரின் பெயர் (முதல் எழுத்துகளுடன்) / Name of Remitter (with initials) ............................

යවන්නාගේ ලිපිනය / அனுப்புபவரின் முகவரி / Address of Remitter ............................

දිනය / திகதி / Date ............  ............ අත්සන/கையொப்பம்/Signature

எழுதுங்கள்

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

### 4.2.4 கூற்று வாக்கியங்கள்.


**உயர்ந்த வாழ்க்கையின் மேன்மைக்கு பண்பு தான் அடிப்படை**
- மில்ட்டன் -

**உடல் வலிமையாக ஆரோக்கியமாக இருந்தால்தான் வாழ்க்கை என்னும் கடலைத் தாண்ட இயலும்.**
-விவேகானந்தர்-

## 4.3 ஆக்க பூர்வமாக எழுதுதல்

### 4.3.1 படம் பார்த்து விபரணம் எழுதுதல்

**கீழேகாணும் படத்தைப் பார்த்து விபரணத்தை எழுதுக.**



...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................

### 4.3.2 கற்பனை செய்து கதை எழுதுக.

சங்கர் பாடசாலைக்கு பேருந்திலே சென்று வருவான். ஒருநாள் அவன் பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது அவனது ஆசனத்திற்குக் கீழ் ஒரு சிறிய காகிதப் பொதியைக் கண்டான். அதனைக் குனிந்து எடுத்தான். ...........................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................

**எழுதுங்கள்**

ஒழுக்கம் உயிரைவிட சிறந்தது

## 4.3.3 நிரப்பி எழுதுதல்.

**உதாரணம்:-** 1. பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்து எழுதுங்கள்.

| நடந்தன, நடந்தேன், நடந்தாய், நடந்தது |
|---|

அ. நான் .............   இ. அவை .............

ஆ. அது .............   ஈ. நீ .............

**உதாரணம்:-** 2. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான முடிக்கும் சொற்களை வைத்து வாக்கியங்களை நிறைவு செய்யுங்கள்.

அ. உண்மை பேசுபவர் உயர்வு ..................................

ஆ. குயில் காகத்தின் கூட்டில் முட்டை ........................

இ. நரி தந்திரமுள்ள ...........................................

**உதாரணம்:-** 3. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிற் பொருத்தமானவற்றை கோடிட்ட இடங்களில் எழுதுங்கள்.

அ. இன்று காலை ........... பெய்தது. (மலை, மழை)

ஆ. அவர் – வீடு கட்டினார். (கல், கள்)

இ. பலாப்பழத்தின் .......... மிகவும் இனிமையானவை. (சுழை, சுளை)


**ஒழுங்குபடுத்தி எழுதுதல்.**


அ. எங்கள் / கூறினார் / அப்படித்தான் / வகுப்பாசிரியரும்

ஆ. இருக்க / என்னைத் / முடியாது / தெரியாதவர் / யாரும்.


இ. பார்த்தோம் / தயாரிக்கும் / தேயிலை / முறைகளைப்


## 4.3.4 சொற் சக்கரம்




**சொல் வட்டம் அமைக்குக**





**எழுதுங்கள்**

| காலை எழுந்தவுடன் படிப்பு |
|---|
| |

**கீழ்க்காணும் சொற் சிலம்பத்தைப் பூர்த்தி செய்க.**




1. 1) இடமிருந்து வலம் – ஒரு பறவை ........................................
2. 6) இடமிருந்து வலம் – கனிவிற்கு ஒரு சொல் ........................................
3. 11) இடமிருந்து வலம் – கண்ணிற்கு ஓர் உவமானம் ........................................
4. 1) மேலிருந்து கீழ் – மனித பண்பு ஒன்று ........................................
5. 6) மேலிருந்து கீழ் – நீர் நிறைந்த இடம் ........................................
6. 14) மேலிருந்து கீழ் – பொருளின் பெறுமதி ........................................


ஒவ்வொரு வரியிலுமுள்ள எழுத்துக்களை உரிய முறையில் ஒழுங்குபடுத்தினால் அடைப்புக்குள் இருக்கும் கருத்தைக் கொடுக்கும் ஒரு சொல் உண்டாகும். அச்சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.


7. ம், ப, ழ, ட, ம், தோ (ஒரு பழத்தின் பெயர்) ........................................
8. லை, ண, ம, தி, கோ, ரு (இயற்கை துறைமுகம்) ........................................
9. றை, கா, கே, ங், ச, ன், து (சீமெந்து உற்பத்தி செய்யும்இடம்) ........................................
10. ளை, ந், த, க, ப், ப (இலங்கையின் மிகக் குளிர் கூடிய இடம்) ........................................
11. வ, த், ர், ன, த, ஜெ, பு, ய, ர, ம் (இலங்கையின் தலை நகரம்)........................................


**<u>சொல்லாக்கம்</u>**


| அ | | ஆ | | |
|---|---|---|---|---|
| பதவி | வி | சிறி | = | பதவி, விசிறி |
| கவி | தை | மாதம் | = | கவிதை, தை மாதம் |
| சுரு | தி | கதி | = | சுருதி, திகதி |
| கரு | வி | கடகவி | = | கருவி, விகடகவி |
| பொதி | கை | மாறு | = | பொதிகை, கைமாறு |

**கீழ்க்காணும் சொல்லாக்கப் பயிற்சியை மாணவர்கள் செய்தல் வேண்டும்.**






**ஒரு பொருள் பற்றி வாக்கியம் எழுதுக.**

1. நான ஒரு தபாற்காரன்
2. தொலைக்காட்சி
3. பேருந்து வண்டி
4. எனது வகுப்பாசிரியர்
5. எனக்குப் பிடித்த விளையாட்டு
6. எனது பொழுதுபோக்கு
7. கணனி.

## மாணவர்கள் எழுதக்கூடிய ஆக்கங்கள்

**பழமொழிகள்**

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.
3. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.
4. ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையாது.
5. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய்.
6. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
7. அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவுவார்களா?
8. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
9. அடியாத மாடு படியாது.
10. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
11. அழுதும் பிள்ளை அவளே பெற வேண்டும்.
12. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
13. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
14. அறையிலாடியன்றோ அம்பலத்தில் ஆட வேண்டும்.
15. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
16. அன்னமிட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா?
17. அறிவுடையாரை அரசனும் விரும்புவான்.

**எழுதுங்கள்**

கடன் நட்பைக் கெடுக்கும்

18. அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்.
19. அன்பான நண்பனை ஆபத்தில் அறி.
20. ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டும்.
21. ஆசை வெட்கம் அறியாது.
22. ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகிறதாம்.
23. ஆடத் தெரியாத தேவடியாள் முற்றம் கோணல் என்றாளாம்.
24. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்.
25. ஆபத்துக்குப் பாவமில்லை.
26. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.
27. ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.
28. ஆலையில்லா ஊருக்க இலுப்பைப்பூசக்கரை.
29.. ஆழமறியாமல் காலை விடாதே.
30. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
31. ஆறு கடக்கிற வரையில் அண்ணன் தம்பி. அப்புறம் நீ யார்? நான் யார்?
32. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
33. ஆனைக்கும் அடி சறுக்கும்.
34. ஆனைக்கொரு காலம், பூனைக்கொரு காலம்.
35. ஆனை வரும் பின்னே மணிஓசை வரும் முன்னே.
36. ஆனை செத்தாலும் ஆயிரம் பொன்.
37. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
38. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
39. இடம் கொடுத்தால் மடம் பிடுங்குவான்.
40. இரு தோணியில் கால் வைக்காதே.
41. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
42. இனம் இனத்தை சேரும்.
43. ஈட்டி எட்டின மட்டும் பாயும் பணம் பாதாள மட்டும் பாயும்.
44. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
45. உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
46. ஊர்வாயை மூட உலை மூடி இல்லை.
47. உடையவன் பாரா வேலை ஒரு முழம் கட்டை.
48. உண்மையே உயர் தந்திரம்
49. உப்பிட்டவரை உள்ளவும் நினை.
50. உப்பு சமைந்தால் தெரியும் உப்பின் அருமை அப்பன் மாண்டால் தெரியும் அப்பன் அருமை.
51. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?

**எழுதுங்கள்**

கந்தையானாலும் கசக்கிகட்டு

52. ஊசி போன இடம் தெரியாது, உலக்கை போன இடம் தெரியும்.
53. ஊமையார் சபையில் உளறுவாயன் மகா வித்துவான்.
54. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.
55. ஊருக்கொரு தேவடியாள் யாருக்கென்று ஆடுவாள்.
56. எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன.
57. எய்தவன் இருக்க அம்பை நோவதேன்.
58. எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டென்ன?
59. எலிவளையானாலும் தனிவளை வேண்டும்.
60. எறும்பு ஊரக் கற் குழியும்.
61. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.
62. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம்.
63. ஏற்ற முண்டானால் இறக்கம் உண்டு.
64. ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா?
65. ஐயர் வரும் வரையில் அமாவாசை காக்குமா?
66. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
67. கடுகு போன இடம் தெரியாது மிளகு போன இடம் தெரியும்.
68. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
69. கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்.
70. கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?
71. கல்வி என்னும் பயிருக்கு கண்ணீர் எனும் மழை வேண்டும்.
72. கரும்பு இனிக்கிறதென்று வேரோடு பிடுங்காதே.
73. கழுதை அறியுமா கற்பூர வாசனை?
74. காகம் திட்டி மாடு சாகுமா?
75. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
76. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
77. கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா?
78. கிட்ட இருந்தால் முட்டப் பகை.
79. கிட்டாதாயின் வெட்டிடென மற.
80. குறை குடம் தழும்பும் நிறை குடம் தழும்பாது.
81. குப்பையில் போட்டாலும் குன்று மணி மங்காது.
82. குரைக்கிற நாய் கடியாது?
83. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
84. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.

**எழுதுங்கள்**

கிட்டாதாயின் வெட்டென மற

85. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.
86. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையிலே தெரியும்.
87. கேடு வரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே.
88. கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை.
89. கையில் வெண்ணெயிருக்க நெய்க்கு அலைவானேன்.
90. கொஞ்ச இடம் கொடுத்தால் மிஞ்ச இடம் பிடிப்பான்.
91. கோவில் பூனை தேவருக்கு அஞ்சாது.
92. சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.
93. சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தால் என்ன?
94. சிறிய பாம்பானாலும் பெரிய தடி கொண்டடி.
95. சிறு துளி பெரு வெள்ளம்.
96. சுகமும் துக்கமும் சுழலும் சக்கரம்.
97. சுண்டங்காய் காற்பணம் சுமை கூலி முக்காற்பணம்.
98. சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப்பணத்துத் தாலி போதாதா?
99. சுவாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடான்.
100. சூடு கண்ட பூனை அடுப்படியை நாடாது.
101. செல்வம் என்பது சிந்தையின் நிறைவே.
102. தன்னைப் புகழாத கம்மாளன் இல்லை.
103. தன்வினை தன்னைச் சுடும்.
104. தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தாற் தெரியும்.
105. தருமம் தலை காக்கும்.
106. தன்னுயிர் போல மன்னுயிரையும் நினை.
107. தாரமும் குருவும் தலைவிதிப்படி.
108. தானம் கொடுத்த மாட்டின் பல்லைப் பிடித்துப் பார்க்காதே.
109. தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதித்தவன் வினை அறுப்பான்.
110. திக்கற்றவனக்கு தெய்வமே துணை.
111. தீராக் கோபம் போராய் முடியும்.
112. துணை போனாலும் பிணை போகாதே.
113. துரும்பும் பல்லுக் குத்த உதவும்.
114. துறவிக்கு வேந்தன் துரும்பு.
115. தூரத்துப் பச்சை கண்ணுக்கு குளிர்ச்சி.
116. தேசத்தோடு ஒத்து வாழ்.
117. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.

**எழுதுங்கள்**

குணம் இல்லாக் கல்வி பாழ்

118. நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்.
119. நாய் குரைத்தால் நமக்கென்ன குறை.
120. நத்தை வயிற்றிலே முத்து பிறக்கும்.
121. நாயைக் கண்டால் கல்லைக் காணோம், கல்லைக்கண்டால் நாயைக் காணோம்.
122. நரிக்கு கொண்டாட்டம் நண்டுக்கு திண்டாட்டம்.
123. நாய்க்கு வேலையுமில்லை நடக்க நேரமுமில்லை.
124. நாய்க்கேன் போர்த் தேங்காய்.
125. நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்.
126. நிறை குடம் தளும்பாது.
127. நிலவுக்கு அஞ்சி பரதேசம் போகலாமா?
128. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
129. பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்.
130. பணம் இல்லதாவன் பிணம்.
131. பந்திக்கு முந்து படைக்கு பிந்து.
132. பல எலி கூடினால் புற்று எடுக்காது.
133. பல நாள் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுவான்.
134. பழகப் பழக பாலும் புளிக்கும்.
135.. பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது.
136. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா?
137. பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல்.
138. பன்றிக்கு பின் போன கன்றும் மலம் தின்னும்.
139. பாத்திரமறிந்து பிச்சையிடு. கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு.
140. பால் தொட்டுப் பால் கறக்க வேண்டும்.
141. பானையில் உண்டானால் அகப்பையில் வரும்.
142. புதுமைக்கு வண்ணான் கரைகட்டி வெளுப்பான்.
143. பூனைக்கு கொண்டாட்டம், எலிக்கு திண்டாட்டம்.
144. பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது.
145. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
146. மருந்தும் விருந்தும் மூன்று வேளை.
147. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
148. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.
149. விளையும் பயிரை முளையில் தெரியும்.

**எழுதுங்கள்**

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

## பின்வரும் நொடிகளை விடுவியுங்கள்

**பின்வரும் நொடிகளை விடுவியுங்கள்**

1. நன்னுவார் தின்ன மாட்டார் அவர் யார்? ..............................................
2. முத்துக்குள்ளே முப்பத்திரண்டு பழங்கள் அது என்ன? ..............................................
3. குடும்பிக்காரன் சமையலுக்கு வீரன் அவர் யார்? ..............................................
4. வெள்ளைக்காரனுக்கு கறுப்புத்தொப்பி அது யார்? ..............................................
5. செம்பு நிறைய முத்து அது என்ன? ..............................................
6. காய்ப்பார், பூப்பார், கலகலப்பார், காகம் இருக்கக் கொப்பில்லை அது யார்? ..................
7. தொப்பென்று விழுந்தான் தொப்பி கழன்றான் அது யார்? ..............................................
8. பூமியில் பிறந்தவன் புகையாகிப் போவான் அவன் யார்? ..............................................
9. ஒரு குப்பியில் இரண்டு நிறங்கள் அது என்ன? ..............................................
10. அள்ளலாம் கிள்ளமுடியாது அது என்ன? ..............................................
11. கையில் தவழும் பையில் உறங்கும் – அது என்ன? ..............................................
12. செப்பு நிறைய மாணிக்கம் – அது என்ன? ..............................................
13. வெயிலில் மலரும் காற்றில் உலரும் – அது என்ன? ..............................................
14. நாலு கால் உண்டு நடுவில் உடல் இல்லை – அது என்ன? ..............................................
15. மணியடித்தால் மலைப்பாம்பு நகரும் – அது என்ன? ..............................................
16. பச்சை வீட்டிற்கு சிவப்பு வாசல் – அது என்ன? ..............................................
17. அகன்ற காட்டின் நடுவே ஒரு பாதை – அது என்ன? ..............................................
18. ஒன்பது பிள்ளைக்கும் ஒரே குடும்பம் – அது என்ன? ..............................................
19. ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு – அது என்ன? ..............................................
20. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறு இல்லை – அது என்ன? ..................................

## கொன்றை வேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து

**எழுதுங்கள்**

கெடுவான் கேடு நினைப்பான்

ஐயம் புகினும் செய்வன செய்
ஒருவரைப் பற்றி ஓரகத்திரு ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
ஔவியம் பேசுதல் ஆக்கியத்திற்கு அழிவு

## 4.4 எழுத்து மொழிப் பிரயோகத்தை அனுசரித்து எழுதுதல்.

### வாக்கிய அமைவை அனுசரித்து வாக்கியங்களை எழுதுதல்

**பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க.**

1. தைப்பொங்கல் ........................................................................
2. ஔவையார் ........................................................................
3. அரசன் ........................................................................
4. கரும்பு ........................................................................
5. புலவர்கள் ........................................................................
6. உழவர்கள் ........................................................................
7. வருநதுபசாரம ........................................................................
8. சித்தார்த்தர் ........................................................................
9. வாழைமரம் ........................................................................
10. சகோதரர் ........................................................................
11. விபுலானந்தர் ........................................................................
12. பொறாமை ........................................................................
13. இயேசு நாதர் ........................................................................
14. மரகதம் ........................................................................
15. நோய்க்கிருமி ........................................................................

**பின்வரும் சொற்றொடர்களை வைத்து வாக்கியம் அமைக்குக.**

மிகமிக ........................................................................
துடிதுடித்தது ........................................................................
விம்மிவிம்மி ........................................................................
முணுமுணுத்தல ........................................................................
துள்ளித்துள்ளி ........................................................................

**எழுதுங்கள்**

சங்கு சுட்டாலும் வெண்மைதரும்

**பின்வரும் சொற்களை வைத்துப் பொருத்தமான வாக்கியத்தை எழுதுங்கள்.**

1. புலவர்கள் ..............................
2. விஞ்ஞானம் ..............................
3. தீர்க்கதரிசி ..............................
4. விகடகவி ..............................
5. முதியவர் ..............................
6. இராஜசிங்கன் ..............................
7. போர்த்துக்கேயர் ..............................
8. கந்தளாய் ..............................
9. நுளம்பு ..............................
10. மரியாதை ..............................
11. தோட்டம் ..............................
12. வயல்கள் ..............................
13. தேவர்கள் ..............................
14. மிளகாய் ..............................
15. சந்தை ..............................

**திணை, பால், எண், இடம், காலம், என்பவற்றை அனுசரித்து வாக்கியங்கள் எழுதுங்கள்.**

**திணைகள்**

திணைகள் இரண்டு வகைப்படும். அவையாவன உயர்திணை அஃறிணை என்பனவாகும். உயர்திணை என்பது உயிருள்ள, அறிவுள்ள மேலோரையும், கீழோரையும் குறிக்கும். அஃறிணை என்பது உயிருள்ள அறிவற்றவையும் உயிரில்லாத பொருட்களையும் குறிக்கும்.

**உதாரணமாக** 1. மனிதன், கர்ணன், கடவுள், மாலதி, அண்ணா உயர்திணை எனப்படும்.
2. மேசை, பூ, ஆடு சிங்கம், முதலியன அஃறிணை எனப்படும்.

**பின்வருவன என்ன திணை என்பதை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆசிரியர் ................ | 11. | வேர் ................ |
| 2. | மாடுகள் ................ | 12. | கார் ................ |
| 3. | வீடு ................ | 13. | மந்திரி ................ |
| 4. | பூக்கள் ................ | 14. | புறா ................ |
| 5. | அப்பா ................ | 15. | மகன் ................ |

**எழுதுங்கள்**

சாதிகள் இல்லையடிபாப்பா

| | | | |
|---|---|---|---|
| 6. | நண்பன் ................ | 16. | மகள் ................ |
| 7. | அரசர் ................ | 17. | மட்டி ................ |
| 8. | அல்லி ................ | 18. | வீதி ................ |
| 9. | மரம் ................ | 19. | சாமி ................ |
| 10. | சரஸ்வதி ................ | 20. | அவள் ................ |

**பின்வரும் பயிற்சியைச் செய்யுங்கள்**

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| உ - ம்<br>அரசன் | வீடுகள் |
| 1. ................................ | ................................ |
| 2. ................................ | ................................ |
| 3. ................................ | ................................ |
| 4. ................................ | ................................ |
| 5. ................................ | ................................ |
| 6. ................................ | ................................ |
| 7. ................................ | ................................ |
| 8. ................................ | ................................ |
| 9. ................................ | ................................ |
| 10. ................................ | ................................ |

**கறுப்பு நிற சொற்கள் உயர்திணையா அஃறிணையா என எழுதுங்கள்**

1. சந்திரன் இரவில் தெரியும்.
2. மாணவி பாடம் படித்தாள்.
3. அரசி அரண்மனையில் இருப்பாள்.
4. வண்டி வேகமாக ஓடியது.
5. பூக்கள காலையில் மலரும்.
6. சிறுவன ஓடி வந்தான்.
7. பெரியப்பா வீட்டிற்கு வந்தார்.
8. பழம இனிப்பாக இருந்தது.

**பாடசாலை பற்றி 5 வசனங்கள் எழுதுக.**

உ + ம்
எனது பாடசாலையின் பெயர் கொட்டாஞ்சேனை தமிழ் மகா வித்தியாலயம்.

1. ..........................................................................................................

**எழுதுங்கள்**

சிறுதுரும்பும் பல்லுக் குத்த உதவும்

2. ..............................................................
3. ..............................................................
4. ..............................................................
5. ..............................................................

**பால்**

**பால் என்பதை பகுப்பு அல்லது பிரிவு எனக் கூறலாம். பாலை ஐந்து வகைப்படுத்தலாம். அவற்றில் உயர் திணைக்குரிய பால் மூன்றாகும்.**

**அஃறிணைக்குரிய பால் இரண்டாகும்.**

1. உயர் திணைக்குரிய பால் – ஆண்பால், பெண்பால், பலர்பால், எனப்படும். உயர்திணை ஆணைக்குறிப்பது ஆண்பால் உயர்திணை பெண்ணைக் குறிப்பது பெண்பால் இவையிரண்டையும் சேர்த்து சொல்வது பலர்பால்.

2. அஃறிணைக்குரிய பால் – ஒன்றன் பால், பலவின் பால் எனப்படும். அஃறிணைப் பொருளான உயிருள்ளதையும் உயிரற்றதையும் சேர்த்து ஒன்றிற்கு மேல் பலவின் பால் எனக் கூறுவர்.
ஆண்பால் என்பது சகல ஆண்வர்க்கத்தினரையும் குறிக்கும்.

உ+ம் சிறுவன், மகன், மாமா
பெண்பால், என்பது சகல பெண் வாக்கத்தினரையும் குறிக்கும்.

உ+ம் சிறுமி, மகள், மாமி
பலர் பால் என்பது இரண்டு பாலரையும், ஒன்றிற்கு மேற்கூறுவதைக் குறிக்கும்

உ+ம் சிறுவர்கள், மகன்மார், சிறுமிகள்

| | ஆண்பால் | பெண்பால் | பலர்பால் |
|---|---|---|---|
| 1. | சகோதரன் | சகோதரி | சகோதரர்கள் |
| 2. | சிறுவன் | சிறுமி | சிறுவர்கள் |
| 3. | மாணவன் | மாணவி | மாணவர்கள் |
| 4. | அரசன் | அரசி | அரசர்கள் |
| 5. | கள்வன் | கள்ளி | கள்வர்கள் |

**எழுதுங்கள்**

சுவருக்கும் காதுகள் உண்டு

**பின்வரும் பயிற்சியை எழுதுங்கள்**

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

| | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|
| 1. | பூ | பூக்கள் |
| 2. | கரடி | கரடிகள் |
| 3. | மேசை | மேசைகள் |
| 4. | மாடு | மாடுகள் |
| 5. | கன்று | கன்றுகள் |

**பின்வரும் பயிற்சியைச் செய்யுங்கள்**

| ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|
| 1. ............................ | 1. ............................ |
| 2. ............................ | 2. ............................ |
| 3. ............................ | 3. ............................ |
| 4. ............................ | 4. ............................ |
| 5. ............................ | 5. ............................ |
| 6. ............................ | 6. ............................ |
| 7. ............................ | 7. ............................ |
| 8. ............................ | 8. ............................ |
| 9. ............................ | 9. ............................ |
| 10. ............................ | 10. ............................ |

**எழுதுங்கள்**

சூதும் வாதும் வேதனை தரும்

## எண்

**ஒருமை - பன்மை**

பொதுவாக எல்லாப பொருடகளின எணணிக்கையும எண என அழைககபபடும. எணணை ஒருமை - பனமை என இரு வகையாகப பாககலாம. ஒனறை ஒருமை எனறும ஒன்றிற்கு மேறபட்டவற்றைப் பன்மை எனவும் அழைப்பார்.

உதாரணமாக
ஒன்று – பந்து, பூ, அரசன்
ஒருமை – பெண், வீடு, கட்டில்
பன்மை – பல – பந்துக்கள், பூக்கள், அரசர்கள், பெண்கள், வீடுகள், கட்டில்கள்

**பின்வரும் ஒருமைச் சொற்களைப் பன்மையாக மாற்றி எழுதுங்கள்.**

| | ஒருமை | பன்மை | | ஒருமை | பன்மை |
|---|---|---|---|---|---|
| 1. | கிளி | ............ | 11. | உடை | ............ |
| 2. | மகன் | ............ | 12. | ஏழை | ............ |
| 3 | பூ | ............ | 13. | வண்டி | ............ |
| 4. | ஆண் | ............ | 14. | தீவு | ............ |
| 5. | நாய் | ............ | 15. | ஆறு | ............ |
| 6. | மரம் | ............ | 16. | புலி | |
| 7. | ஆசிரியர் | ............ | 17. | வண்டு | ............ |
| 8. | சிறுவன் | ............ | 18. | அவன் | ............ |
| 9. | பலகை | ............ | 19. | சேவகன் | ............ |
| 10. | தம்பி | ............ | 20. | தங்கை | ............ |

**பன்மைச் சொற்களை ஒருமையாக மாற்றி எழுதுக.**

| | பன்மை | ஒருமை | | பன்மை | ஒருமை |
|---|---|---|---|---|---|
| 1. | மகன்மார் | ............ | 11. | பெட்டிகள் | ............ |
| 2. | கதவுகள் | ............ | 12. | நாங்கள் | ............ |
| 3 | சட்டிகள் | ............ | 13. | நீங்கள் | ............ |
| 4. | பற்கள் | ............ | 14. | எங்கள் | ............ |
| 5. | கல்லுகள் | ............ | 15. | கிளிகள் | ............ |
| 6. | புலிகள் | ............ | 16. | தென்னைகள் | ............ |
| 7. | மலைகள் | ............ | 17. | ஓலைகள் | ............ |
| 8. | பிள்ளைகள் | ............ | 18. | கிழமைகள் | ............ |
| 9. | மாணவர் | ............ | 19. | தங்கைகள் | ............ |
| 10. | சிறுவர் | ............ | 20. | வாத்துக்கள் | ............ |

பின்வரும் வசனங்களுக்கேற்ற ஒருமை பன்மைச் சொற்களை வைத்து நிரப்புக.

1. .................................. பாடசாலை போனான்.
2. .................................. காலையில் கூவின.
3. .................................. அதிகாலையில் எழுந்தேன்.
4. .................................. பால் குடித்தது.
5. .................................. வேலை செய்தார்கள்.
6. .................................. பரீட்சைக்குப் படித்தார்கள்.
7. .................................. காட்டில் வாழும்.

## இடம்

**காலம்**

காலஙகள மூனறு வகைபபடும. அவை இறநத காலம, நிகழகாகலம எதிர்காலம் என்பனவாகும்.

1. இறந்த காலம் – நடந்து முடிந்த செயலைக்குறிக்கும்.
2. நிகழ்காலம் – நடந்து கொண்டிருக்கும் செயலைக் குறிக்கும்.
3. எதிர்காலம் – நடக்கப் போகும் செயல்களைக் குறிக்கும்.

உதாரணம்

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. | ஓடினான் | ஓடுகிறான் | ஓடுவான் |
| 2. | குடித்தான் | குடிக்கிறான் | குடிப்பான் |
| 3. | வந்தான் | வருகிறான் | வருவான் |
| 4. | பாடினான் | பாடுகிறான் | பாடுவான் |
| 5. | நடந்தான் | நடக்கிறான் | நடப்பான் |

பின்வரும் பயிற்சியைச் செய்யுங்கள்

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| 1. வந்தது | ............ | ............ |
| 2. ............ | படிக்கிறான் | ............ |
| 3. ............ | ............ | போவான் |
| 4. ............ | பாய்கிறான் | ............ |
| 5. கேட்டான் | ............ | ............ |
| 6. ............ | ............ | பார்ப்பான் |
| 7. தெரிந்தது | ............ | ............ |
| 8. ............ | ஆள்கிறான் | ............ |
| 9. மலர்ந்தது | ............ | ............ |
| 10. ............ | தோன்றுகினறது. | ............ |

**காலங்களைக் கோட்டில் எழுதுக.**

1. அம்மா சோறு சமைக்கிறாள் ..............................
2. ஆசிரியர் பாடம் கற்பித்தார் ..............................
3. நாங்கள் பால் குடிக்கிறோம் ..............................
4. அரசன் நாட்டை ஆண்டான் ..............................
5. கண்ணகி பாட்டுப் பாடுவாள் ..............................
6. சந்திரன் வானில் உலாவுகிறான் ..............................
7. பூக்கள் காலையில் மலரும் ..............................
8. பசு புல் மேய்கிறது ..............................
9. அப்பா சட்டை போட்டார் ..............................
10. நாங்கள் உண்மை பேசுகிறோம். ..............................

**பின்வரும் சொற்களுக்கு திணை, பால், கண், இடம், கூறுக.**

*சொற்கள் -*

மாணவர்கள் – பூக்கள் – கோழி – மாதா – யாமா – சிறகுகள் – கரடி – அதிபர் – சிறுவன் – புறா.

| | திணை | பால் | என் | இடம் |
|---|---|---|---|---|
| 1. | ............... | ............... | ............... | ............... |
| 2. | ............... | ............... | ............... | ............... |
| 3. | ............... | ............... | ............... | ............... |
| 4. | ............... | ............... | ............... | ............... |
| 5. | ............... | ............... | ............... | ............... |
| 6. | ............... | ............... | ............... | ............... |
| 7. | ............... | ............... | ............... | ............... |
| 8. | ............... | ............... | ............... | ............... |
| 9. | ............... | ............... | ............... | ............... |
| 10. | ............... | ............... | ............... | ............... |

**பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க**

1. அழுத பிள்ளை ..............................................
2. ஆழமறியாமல் ..............................................
3. இளமையிற் கல்வி ..............................................
4. இரக்கப் போனாலும் ..............................................
5. புத்திமான் ..............................................

**நீர் அறிந்த பெரியார் பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக.**

1. ..............................................................................
2. ..............................................................................
3. ..............................................................................
4. ..............................................................................
5. ..............................................................................

## தாய்மொழி – தமிழ் கணிப்பீடு செய்தல் – தகவல்களைப் பதியும் படிவம் – தரம் 4

| கணிப்பீட்டு அளவிடையை வெற்றிகரமாகச் செய்தார் (√) இடர்ப்பாட்டை வெளிப்படுத்தினார்/ மேலும் உதவி தேவை (.) / மாணவர் பெயர்கள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. ஆசிரியர் கூறும் அறிவித்தல் ஒன்றைச் செவிமடுத்து அதற்கேற்ப துலங்குவார். | | | | | | | |
| 2. உரையாடலொன்றை அல்லது கதை ஒன்றை செவிமடுத்து அதில் உள்ளடக்கியுள்ள கருத்துக்களை விளங்கிக் கொள்தல். | | | | | | | |
| 3. நிகழ்வொன்றின் ஒரு பகுதியை செவிமடுத்து அந்நிகழ்வின் மிகுதிப் பகுதியை கற்பனை செய்து கூறுவார். | | | | | | | |
| 4. கதை ஒன்றை இரசனையோடு கூறுதல். | | | | | | | |
| 5. சிறுவர் பாடலொன்றை நினைவிலிருத்தி தாளலயத்துடன் பாடுதல். | | | | | | | |
| 6. தாம் கூறுபவற்றை சிக்கலின்றிப் பிறர் விளங்கிக் கொள்ளக்கூடிய முறையில் கூறுதல். | | | | | | | |
| 7. பெற்றுக் கொண்ட தகவலொன்றை உரியவருக்குத் தெரிவித்த பின்னர் அவர் கூறிய தகவலை பிழையின்றின்றி கூறுதல். | | | | | | | |
| 8. பாடநூலில் கொடுக்கப்படுகின்ற எந்தவொரு குறியையும் குறியீடுகளைக் கவனித்து சொற்களைத் தடங்கலின்றி உரத்து வாசித்தல். | | | | | | | |
| 9. பாடநூலில் தெரிவு செய்த பந்தி ஒன்றை மௌனமாக வாசித்து வினவப்படும் வினாக்களுக்கு விடையளித்தல். | | | | | | | |
| 10. இலகுவான பாடலொன்றை வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளித்தல். | | | | | | | |
| 11. இலகுவான அறிவுறுத்தல் ஒன்றை வாசித்து விளங்கி அதற்கேற்ப துலங்குதல். | | | | | | | |
| 12. அறிவித்தல் அழைப்பிதழ் ஆகியவற்றை வாசித்து அதிலுள்ள முக்கியத்துவத்தை விளங்கிக் கூறுதல். | | | | | | | |
| 13. கொடுக்கப்படும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துள்ள சொற்களைக் கூறுதல். | | | | | | | |
| 14. கொடுக்கப்படும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துள்ள சொற்களைக் கூறுதல். | | | | | | | |
| 15. பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் உள்ள இலகுவான செய்திகளை வாசித்து அதிலுள்ள முக்கிய கருத்துக்களைச் கூறுவார். | | | | | | | |
| 16. எழுத்துக்களின் அமைப்பு, அளவு, திசைமுகம் என்பவற்றை அனுசரித்து எழுதுவதோடு நிறுத்தற்குறிகளையும் உரிய இடங்களில் இடுதல். | | | | | | | |
| 17. எழுத்துக்களுக்கிடையேயும். சொற்களுக்கிடையேயும் போதியளவு இடம் விட்டு எழுதுதல். | | | | | | | |
| 18. இலகுவான சொற்களை சிறிய வாக்கியங்களால் செவிமடுத்து எழுதுதல். | | | | | | | |
| 19. சுய விபரங்கள் உள்ளடக்கிய மாதிரிப் படிவத்தைப் பூரணப்படுத்துதல். | | | | | | | |
| 20. நண்பருக்கு/உறவினருக்கு தனது செய்திகளை உள்ளடக்கிய கடிதம் எழுதுதல். | | | | | | | |
| 21. கொடுக்கப்படும் தலைப்பிற்கேற்ப சிறிய கட்டுரை எழுதுதல். | | | | | | | |
| 22. எழுவாய், பயனிலைச் சொற்களை வாக்கியங்களில் உரிய முறையில் பயன்படுத்தி பிழையின்றி எழுதுதல். | | | | | | | |
| 23. பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் ஆகியவற்றை இனங்கண்டு எழுதுதல். | | | | | | | |
| 24. ஒருமை, பன்மை, ஆண்பால், பெண்பால் சொற்களை இனங்கண்டு எழுதுதல் | | | | | | | |
| 25. தன்மை முன்னிலை, படர்க்கைச் சொற்களை இனங்கண்டு எழுதுதல். | | | | | | | |

# Bright - இன்
## வெளியீடுகள்

- ★ கணிதம்
- ★ தாய் மொழி தமிழ் செயல் நூல்
- ★ சைவ நெறி
- ★ சுற்றாடல் அடிப்படையிலான செயற்பாடுகள்
- ★ **LET'S LEARN ENGLISH - WORK BOOK**
- ★ இஸ்லாம்
- ★ கட்டுரை மஞ்சரி 3 – 4 – 5
- ★ சுற்றாடல் அடிப்படையிலான செயற்பாடுகளுக்கான செயல் நூல்
- ★ சிறுவர் கதைகள்
  - தென்னாலி இராமன் கதை
  - அலிபாபாவும் 40 திருடர்களும்
  - அலாவுதீனும் அற்புதவிளக்கும்
  - விந்தை புரிந்த விஞ்ஞானிகள்

எமது **BRIGHT** வெளியீடுகள்
சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
தபாலில் பெறவிரும்புவோர் **20/=** முத்திரை அனுப்பி **V.P.P.** யிலும்
பெற்றுக் கொள்ளலாம்.

ISBN 955-8332-56-9

BRIGHT BOOK CENTRE

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27, FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER
MARKET COMPLEX, P.O. BOX NO: 162,
COLOMBO - 11. TELE: 434770.